தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௮	மலர்
௩௩	ஏவிளம்பி, ஆடி 1957 சூலை, ஆகஸ்டு	௪

பொழிற் றொண்டர் கருத்துரைகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரசோழன் செப்பேடுகளின் முதற் பகுதி, கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சுலோகங்களாகும். அவற்றை, தஞ்சை சரசுவதி மஹாலிலிருந்து வடமொழிஏடுகளை ஆய்ந்துவரும், நாவல்பாக்கம் சிரோமணி ஸ்ரீ தேவநாதாச்சாரியார் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துத்தந்துள்ளனர். இப்பகுதியால் சோழரின் தொன்மையான மரபுவழி கூறப்பெறுவதுடன், சிறப்பாக முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் இவர்களுடைய வெற்றிமேம்பாடுகளுட்சில, இதுவரையில் சரித்திரங் காணுத வகையில் கூறப்பெற்றுள்ளன. அத்துடன் சோழன், இராசகேசரி, பரகேசரி ஆகிய மன்னர்கள் முறையாக வாழ்ந்தனரென்பதும், அவர்களுடைய பெயர்களையே அம்மரபில் வந்தோர் தம் பெயரோடு முன்னும் பின்னும் முறையாகக் கொண்டு வழிவழி வந்தனர் என்றும் கூறும் செய்தி சிந்தனைக்குரியதாகும். முதலாம் இராசராசன் மேலைச்சளுக்கியப்போரில் சத்தியாசிரயனைத் தான் ஒருவனே குதிரைமீதிருந்து தனித்துப் போர் செய்து, உயிருடன் பிடித்ததாகக் கூறப்படும் செய்தி வரலாற்றுப் புதுமையுடையது.

மார்ச்சு 1957ல் சென்னைப் பல்கலைக் கழகத்தேர்வில் கலந்துகொண்ட கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் தேர்வு விவரம்.

வித்துவான்	முதனிலை	முடிவு நிலை
தேர்வில் கலந்துகொண்ட மாணவர்	38	36
* முதல் தகுதியில் வெற்றி பெற்றவர்	1	1
இரண்டாம் ,, ,,	11	9
மூன்றும் ,, ,,	21	21

* முதனிலை A. சிவானந்தம், முடிவுநிலை K. கணேசமூர்த்தி.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

1. வடமொழிப் பகுதியின் மொழிபெயர்ப்பு.

ஏடு—க. பக்கம்—க.

1. [1] ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகளின் பருத்த இரு திருமுலைத் தடங்களின் [2] குங்குமக்குழம்பினுல் அடையாளமிடப்பட்டனவும், (பாற்கடல் கடைந்த ஞான்று) சுழன்றுகொண்டிருக்கிற மந்தர மலையினுடைய உயர்ந்த குடுமிகளில் உராய்வதனுல் மிக்கு ஒளி பெற்ற பொன்னுலான தோள்வளைகளை உடையனவும், மூவுலகத்தையும் காப்பனவும், சார்ங்கம் முதலிய ஆயுதங்களைத் தாங்கித் திகழுகின்றனவுமான, இந்திர நீலக்கல் போன்ற திருமேனியை உடைய திருமாலின் புயங்கள் உங்களுக்கு வேண்டிய அளவு செல்வத்தை கொழிக்கச் செய்வனவாக.

2. * திருமகளுக்கு உவகையைக் கொடுப்பவர்களாகவும், இருளைப் போக்கடிப்பவர்களாகவும், [3] சன்மார்க்கத்திற்கு ஒளியைக் கொடுப்பவர்களாகவும், ஏனைய அரசர் குழாத்தின் பொலிவைப் போக்கடிப்பவர்களாகவும், எக்காலமும் மேன்மையுடன் சிறந்து தோன்றி தமது மரபின் முதல்வனுன கதிரவனை ஒத்து விளங்குகின்றுர்களோ அத்தகைய பெருவேந்தர் பிறந்த திருநிறைந்த சோழர்மரபு, கடல்சூழ்ந்த நிலவுலகத்தை நீடூழி காப்பதாகுக.

3. உலகங்கள் அனைத்திற்கும் ஒரு கண்ணுக விளங்கும் கதிரவனிடமிருந்து அரசர்களுக்கெல்லாம் முதல்வனுன மனு தோன்றினுன். அரசர்களின் மணிமுடி வரிசையினுல் தழுவப் பெற்ற பாதபீடத்தை உடையவனுன இட்சுவாகு என்னும் அரசன் அவனுடைய (மனுவின்) புதல்வனுகத் தோன்றினுன். அவனது மரபில் லோகா லோக (சக்கரவாள) மலைவரை நெறி வழுவாது இந்நிலவுலகைக் காப்பாற்றியவனும், நான்முகனை ஒத்தவனும், நற்குணங்கட்கு இருப்பிடமானவனுமாகிய மாந்தாதா என்னும் வேந்தன் தோன்றினுன்.

---

1 ஸ்வஸ்தி ஸ்ரீ = நன்றுக

2 காச்மீரபங்கம் என்பது வடமொழி மூலம்

* இப்பகுதி, கதிரவனுக்கும் சோழனுக்கும் சிலேடையாகக் கூறப் பட்டுள்ளது.

3 சத் + மார்க்கம் = { விண்மீன்கள் செல்லும் நெறி / நல்வழி }

சக்கரவாளமலை—உலகைச் சூழ்ந்துள்ள மலை.

4. (பின்னர்) தேவாசுர யுத்தத்தில் தேவராசனைக் காத்தவனும், முசுகுந்தனுக்குரிய திருத்தகவினைப் பெற்றவனுமாகிய முசுகுந்தன் என்னும் வேந்தன் தோன்றினான்.

5. குற்றமற்றவனும் கொண்டாடத் தகுந்த புகழை உடையவனுமான எவனுடைய பெருமையானது உலகில் எக்காலமும் நல்லோர்களால் நன்கு பாடப்படுகிறதோ அத்தகைய ஒப்பற்ற பெருமையை உடைய **சிபி** என்னும் அரசன், புகழ் பெற்றதும் களங்கமற்றதுமான அம்மரபிற்கு மணிவிளக்காய்த் தோன்றினான்.

6. மன்னுயிர்க்கெனவே தன்னுயிரைக் காத்தவனும், பெருமிதப் பண்புகளால் நிறைந்தவனுமாகிய அவ்வேந்தனுடைய குணங்களைப் புலவர் பெருமானாகிய வியாசரல்லது எடுத்துரைக்க வல்லார் யாவர்?

7. அக்குலமாகிய கடலுக்கு நிறைமதியையொத்து விளங்குபவனும், கலைக்கு இருப்பிடமானவனும் ஆகிய **சோழன்** என்பான்[1] தோன்றினான். இவன் முதலாக இவன் மரபில் தோன்றிய மன்னர்கள் யாவரும் சோழன் என்ற பெயரையே தாங்கி வருகின்றனர்.

8. பகைவர்களாகிற யானைகட்கு அரியேற்றினை ஒத்த **இராசகேசரி**[2] என்ற வேந்தன் அவனுக்கு (சோழனுக்கு)ப் புதல்வனாகத் தோன்றினான். அவனுக்குப்பின், பகைப்படையை முறியடிப்பதிலேயே நோக்கங்கொண்டவனும், வலிபடைத்தவனுமாகிய **பரகேசரி**[3] என்னும் வேந்தன் தோன்றினான்.

9. அந்த இராசகேசரியின் பெயரும், பரகேசரியின் பெயரும் அக்குலத்தில் தோன்றிய அரசர்கட்கு முறையே மாறி மாறி வழங்கும் ஆணையாயிற்று.

10. போராற்றல் படைத்த எவனுடைய தனியரசில் கூற்றுவன் நடுநடுங்கிக் குடிமக்களிடம் தோன்றுவதில்லையோ அப்படிப்பட்டவனும், இணையற்றவனும், அறிவில் தேவகுருவுக்கு (வியாழன்) ஒப்பாகத் திகழ்பவனும், **சுரகுரு** என்னும் பெயருள்ளவனுமான அரசன் அக்குடியில் தோன்றினான்.

1-3. 'சுராதிராசன் முதலாகவருசோழன் முனநாள்
    சோழமண்டல மமைத்தபிற கேழுலகையும்
இராசகேசரி புரந்து பரகேசரிகளாம்
    இருவராணை புலியாணையென நின்றவிதுவும்' (கலிங். 8-14)

என வரும் தாழிசையில் சோழன் என்ற பெயருடைய வேந்தனும் அவன் வழியில் இராசகேசரி, பரகேசரி என்ற வேந்தர் இருவரும் கூறப்பெற்றிருத்தல் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

11. உயிர் வகைகளெல்லாம் எவனைக்கண்டு நடுங்குகின்றனவோ, அத்தகைய கூற்றுவனைப் பெரும் போரில் வென்று, தேவர்களாலும் பெறமுடியாத 'மிருத்யுஜித்' (கூற்றுவனை வென்றவன்) என்ற பெயரை அவன் (சுரகுரு) பெற்றான்.

12. அந்த வம்சத்தில் தன் ஒளியால் கதிரவனைப்போல் மிக்கு விளங்கும் **உபரிசரவசு** என்னும் அரசன் தோன்றினான்.

13. மனத்தினும் கடியதாகிய சிறந்த விமானத்தில் ஏறி வானவழியில் இயங்கியவனும், காவிரிக்குக் கரைகண்டவனும், பகைவர்க்குக் கூற்றுவனை ஒத்தவனும் ஆகியவன் எவனோ, அத்தகைய **கரிகாலன்** என்னும் மன்னன் அம்மரபில் தோன்றினான்.

14. அம்மரபில் தோன்றி உலகம் முழுமையும் தனியாட்சி செலுத்திய எண்ணற்ற வேந்தர்கள் விண்ணுலகை அடைந்த பிறகு,

ஏடு—க. பக்கம் உ.

கடல்சூழ்ந்த இவ்வுலகைக் குன்றாத பெருவலியுடன் புரந்தவனான **விசயாலயன்**[1] என்ற பெயருள்ள வேந்தன் தோன்றினான்.

15. பகைகொண்ட அரசர்களாகிற இருளின் கூட்டங்களை அழித்தவனும், பிரதாபம் (வாட்டுதல்) மிக்கவனும், இணையற்ற ஒளியை உடையவனுமான **ஆதித்யன்** அவனிடமிருந்து தோன்றினான்.

16. எண்ணற்ற (புலவர்) இரத்தினங்களின் குவியல்களுக்கு ஒரே இருப்பிடமானவனும், வள்ளன்மை நிறைந்தவனுமான அவனிடமிருந்து, பாற்கடலில் திங்கள் தோன்றியதுபோல, உலகத்தின் நலனுக்காகப் ***பராந்தகன்** என்னும் கலைகள் நிறைந்த அரசன் தோன்றினான்.

17. அவ்வீரன் (பராந்தகன்) சிங்கள தேசத்து அரசனையும், பாண்டிய அரசனையும், வெளிப்படையான புகழ் படைத்தவனும் வெல்லமுடியாதவனுமான கேரள தேசத்து அரசனையும், பல்லவ அரசனையும், போரில் முறியடித்து அவ்வரசர்களுடைய புகழ்

---

1 இவ்வேந்தனே கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையில் சோழர் பேரரசை நிறுவியவனாவான். 'மீதெல்லாம், எண் கொண்ட தொண்ணூற்றின்மேலும் இருமூன்று, புண்கொண்ட வென்றிப்புரவலன்' (விக்கிரம—29, 30) என ஒட்டக்கூத் தரால் பாராட்டப்பெற்றவன் இவனேயாவன்.

* முதலாம் பராந்தகன்

களையும், நாடுகளையும், செல்வங்களையும், ஊர்திகளையும் தனக்குரிமையாக்கிக்கொண்டான்.

18. சூரிய வம்சத்திற்கு திருவிளக்குபோன்ற அவ்வரசன், புலியூரில் (வியாக்ர அக்ரஹாரத்தில்) தன் தோள் வலிமையால் எல்லாத் திசைகளையும் வென்று அங்கிருந்தும் கொண்டுவரப் பட்ட மாசற்ற பொற்குவியல்களினால், பிறைசூடிய இறைவனுடைய கோயிலை வேய்ந்தனன்.*

19. அவ்வரசன் (பராந்தகன்), உலகத்திற்குத் திலகம் போன்றதும், பெருஞ்செல்வம் படைத்ததும், ஊழிக்காலத்திலும் மாறுபாடின்றி விளங்குவதுமான வீரநாராயணம் என்னும் ஊரை (அக்ரஹாரத்தை)த் தன் பெயரால் ஏற்படுத்தினான்.

20. செல்வம் மிக்கவனும் அரசர்களுள் சிறந்தவனுமான அவன், இவ்வுலகில் ஆங்காங்கு செல்வம் மிகுந்த ஏனைய பெரிய ஊர்கள் (அக்ரஹாரங்கள்) பலவற்றையும் நிறுவினான்.

21. அவன் நிலத்தை வளனுள்ளதாகச் செய்வதற்கு, ஆழமானதும் தெளிவான நீர் உள்ளதுமான ஆறுகளை நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் வெட்டச் செய்தான்.

22. அந்தப் பராந்தகன் இமையோருலகைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டபோது, அவனுடைய மகனான **அரிஞ்சயன்** என்பவன் மானிட உலகத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றான்.

23. தன்னுடைய நற்பண்புகளால் மக்களை மகிழ்வித்துக் கொண்டு கடல் சூழ்ந்தவுலகை இன்பமாகக் காப்பாற்றியவனும், திரிபுரத்தை அழியச்செய்த சிவபெருமானுக்கு ஒப்பானவனும்,

---

*ஈழமுந்தமிழ்க் கூடலுஞ் சிதைத்
திகல் கடந்ததோரிசை பரந்ததும்
எனச் சயங்கொண்டாரும், (கலிங்-8,23)

'ஈழமெழுநூற்றுக் காதமுஞ் சென்றெறிந்து
வேழந்திறைகொண்டு மீண்டகோன்'

'கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன் வேய்ந்த காவலன்' (இராசராசனுலா-36,38)

என ஒட்டக்கூத்தரும் இவ்வேந்தனது ஈழத்து வெற்றியையும் தில்லையிற் பொன்வேய்ந்த செயலையும் முறையே பாராட்டுதல் காணலாம்.

பகைவருடைய படைகளைச் சிதைப்பவனுமான †பராந்தகன் என்னும் அரசன் அரிஞ்சயனிடத்தினின்றும் தோன்றினன்.

24. சேவூர் என்னும் நகரத்தில் தனது அழகிய வில்லி லிருந்து விடப்பட்ட கூர்மையான அம்புக் குவியலால் திக்கு களில் இடைவெளி இல்லாமல் செய்தவனும், கூர்மையான வாளாயுதத்தால் பிளக்கப்பட்ட மலைபோன்ற பகைவர்களின் யானைகளினின்றும் இழிந்தோடும் பலவகையான இரத்த ஆறுகளைத் தோற்றுவித்தவனும்,

25. பகைவர்களின் கூட்டங்களை வாள் முனையினுல் போக்கியவனுமான அவன் (பராந்தகன்) மிக்க சீற்றமுடைய னை வீரபாண்டியனை வலியினுல் போரில் வென்று, அப்பொ ழுதே தனது மாசற்ற உயர்ந்த புகழை *ஸஹ்யம் என்னும் பெரிய மலையினது உயர்ந்த சிகரத்திலும், இமையோருலகிலும் ஏற்றினன்.

26. அரசர்களுள் சிறந்த அவன் (பராந்தகன்) வானுலகைக் காப்பதற்குச் சென்றபொழுது, அரசர்களின் முடிவரிசைகளால் தழுவப்பட்ட பாதபீடத்தை உடையவனும், சோழ மரபிற்கு விளக்குப் போன்றவனுமான (அந்த) **இராசராசன்** என்னும் அவனுடைய மகன், ஆதிசேடனுடைய உடலின் அழகைப் பற்றுகிற புயத்தினுல் சுமை பொருந்திய இவ்வுலகைத் தாங்கினன்.

27. பெருவலியினையே செல்வமாகக் கொண்டவனை சிராசராசன், சிங்கள, பாண்டிய, கேரள அரசர்களையும், கொங் கேசுவரர்களையும், மாளவர்களையும், தெலுங்கர்களையும், கங்கர் களையும், கலிங்கர்களையும், வங்கர்களையும், மகதர்களையும், சாளுக் கிய அரசர்களையும், குருநாட்டு அரசர்களையும், ஏனைய எல்லா அரசர்களையும் தோள்வலியால் போரில் வென்று, அவர்களுடைய யானைகளையும், குதிரைகளையும், நாடுகளையும், இரத்தினங்களையும், செல்வங்களையும் கைப்பற்றினன்.

28. எவனுடைய யானைகளின் தந்தங்களாலுண்டான வடுக்கள் இன்றளவும் துங்கபத்திரை ஆற்றினுடைய கரைகளி லுள்ள மலையைச் சார்ந்த இடங்களில் எங்கும் விளங்கு கின்றனவோ

---

† இரண்டாம் பராந்தகன்: இவன் சுந்தர சோழன் என வழங் கப்பெறுவன்.

ஸஹ்யம் = குடகுமலை

29. அவன் (இராசராசன்) ஊழிக்காலத்துக் கடல்போன்ற தனது படையைத் திருப்பிவிட்டு

ஏடு-உ. பக்கம் க.

ஒரு நொடியில் தான் ஒருவனாகவே குதிரையில் ஏறிக்கொண்டு, மிகக் வேகத்துடன் வந்துகொண்டிருக்கிற சத்தியாசிரயனுடைய படையை, விண்ணினின்றும் வேகத்துடன் விழுகின்ற கங்கையைச் சிவபெருமான் சடையினால் தாங்கியதைப்போல் விளையாட்டாக (தனது) கொடிபோன்ற வாளினால் ஏற்றான்.

30. பெருந்தோள் படைத்த அவன், வாணாசுரனையொத்த ஒளியுள்ளவனான வாணராசனைப் படைக்கலங்களால் அடியோடு அழித்து, போகதேவனுடைய தலையைத் துணித்தான்.

31. கேசவனுக்கு ஒப்பானவனும், கேசவன் என்னும் பெயருள்ளவனுமான சத்தியாசிரயனுடைய சேனைத்தலைவன் அந்த இராசராசனால் போரில் உயிருடன் பிடிக்கப்பட்டான்.

32. பகைவருடைய படைகளை அழித்துக்கொண்டிருக்கும் அவ்வரசரேறு, ஊழிக்காலத்தில் எல்லா மக்களையும் அழிக்கும் பினாகம் என்னும் வில்லையுடைய சிவபெருமான்போல் விளங்கினான்.

33. அவ்வரசனால் (இராசராசனால்) பகைவர்களின் படை அழிக்கப்படும்பொழுது ஆங்காங்கு இரு கால்கள், இரு தொடைகள் வயிறு, மார்பு, கைகள், தலை இவைகளில் வெட்டுப்படாதான் ஒருவனும் இல்லை.

34. அவன் (இராசராசன்) குதிரைகளின் வரிசைகளாகிற அலைத்தொகுதிகளை உடையதும், யானைகளாகிற முதலைகளால் சூழப்பட்டதும், காலாட்களின் கூட்டங்களாகிற கொந்தளிக்கும் நீர்ப்பரப்பை உடையதும், மண்ணுலகத்தையே மறைப்பதுவுமான சத்தியாசிரயனுடைய படையாகிற கடலைத் தனது புயங்களாகிய மந்தரமலையினால் வலிமையுடன் கடைந்து, புகழாகிற மதியுடன் வெற்றித் திருமகளையும் விரைவில் ஏன்று கொண்டான்.

35. மனு வம்சத்திற்குக் கொடிபோன்றவனும், எமனுக்கொப்பானவனுமான அவன் (இராசராசன்) ஒரே குதிரையுடன் வலிமை பொருந்திய சத்தியாசிரயனை இரத்த ஆறுகள் சூழ்ந்த போர்முனையினின்றும் ஒரே நொடியில் ஓடச்செய்து, அவனது தோள்வலியால் ஈட்டப்பட்ட மதம் பொருந்திய யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், பெண்கள், குடைத்தொகுதிகள், கொடிகள் இவை யாவற்றையும் பறித்துக்கொண்டான்.

36. கதிரவன் எழுதலினால் பளபளப்பான தாழ்வரைகளை உடைய மலைவரையிலும் (உதயபர்வதம்) தென்கடல் வரையிலும், பகலவன் போய் மறைகிற மலைவரையிலும், சிவபெருமான் வீற்றிருக்கும் சிறந்தமலை வரையிலும் (இமயம்) தங்களுடைய மரபுகளைக் காப்பாற்றுவதில் நோக்கங்கொண்ட அரசர்கள் யாவரும் பலவகையான இன்பங்களை (தாம்) அனுபவிப்பதற்கு நித்யாதித்ய விநோதனுடைய (நாளும் நிலைத்து நிற்கும் ஞாயிறு போன்ற அவ்வரசனுடைய) தாமரை போன்ற இரு பாதங்களை அடைந்தனர்.

37. வள்ளலான அவ்வரசன் தன் பாதத்தை அடையும் அரசர்கட்குப் பல்லாற்றானும் ஆதரவு கொடுத்து வந்தான். அதனால் இணையற்ற வீறுடைய அவனை உலகில் நல்லோர்கள் *இராசாசிரயன் என்று சொல்லுகிறார்கள்.

38. தேவேந்திரன், எமன், வருணன், குபேரன் ஆகிய இவர்களுடைய செல்வங்கள் யாவும், மனிதருட் சிறந்தவனான அவனால் (இராசராசனால்) முறையே அவரவர்களுடைய திசைகளை வென்று பறிக்கப்பட்டன.

39. கலியின் வலியைச் சிதைப்பதற்காகத் திருமாலே உலகில் பிறந்துவிட்டார் என்று எவனைச் சிறப்பித்துச் சொல்லுவார்களோ அப்படிப்பட்டவனும், மனுகுலத்திற்கு அணியாய் விளங்குகிறவனுமான ‡மதுராந்தகன் என்னும் அரசனைப் புத்திமானான அவ்வரசன் தோற்றுவித்தான்.

40. அவன் (மதுராந்தகன்) புன்சிரிப்பினாலும் வடிவழகினாலும் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியையும், பகைவர்களுக்குப் பெரும் அச்சத்தையும் நாளும் கொடுத்துக்கொண்டு வளர்ந்து வந்தான்.

41. அவன் எனது பொறையைத் தரை தாங்கும் தரமுடையதோ இல்லையோ என்று ஐயுற்றவன் போல, செவிலித் தாயரின் கையைத் தன் கையால் பற்றிக்கொண்டு தரையின்மீது மிக மிக மெதுவாகக் கால்களை (எடுத்து) வைத்தான்.

42. அவன் இளம் பருவத்திலேயே எல்லா வேதங்களையும் சாத்திரங்களையும் அறிந்தவனாய், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேரேறுதல், இவைகளில் மிக்க பயிற்சியுள்ளவனும், வாட்போரின் நுட்பங்களை அறிந்தவனும், எறிபடைக்கலங்களில் தேர்ச்சிபெற்றவனுமாகி,

---

* ராஜாஸ்ரயன் = அரசர்களுக்குப் பற்றுக்கோடானவன்.

‡ மதுராந்தகன் என்பது இச்செப்பேடுகளை வழங்கிய முதல் இராசேந்திர சோழனுக்குப் பெற்றோர் இட்ட பெயராகும்.

(தொடரும்.)

குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள் அல்வழியில் தனித்தனி இடம் பெறாததேன்?

(வித்துவான், சு. குமாரசாமி, கலைக்கல்லூரி, புதுவை.)

ஆசிரியர் தொல்காப்பியர் வேற்றுமை அல்வழி என்ற பாகுபாட்டைக்கொண்டு வேற்றுமைத்தொடர்கள் ஆறெனக் கூறினர். ஆனால் அல்வழியில் உள்ள தொடர்கள் இத்தனையென வரையறுத்திலர். நன்னூலார், அவ்வழியில் பதினான்கு தொடர்கள் கொண்டனர். அது,

வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில் பண்புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்ச முற்றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே

என்னும் சூத்திரத்தால் நன்கு விளங்கும். அவையாவன :—

தொழில் 1 (வினைத்தொகை), பண்பு 2, உவமை 3, உம்மை 4, அன்மொழி 5, எழுவாய் 6, விளி 7, ஈரெச்சம் 9 (பெயரெச்சம், வினையெச்சம்) (ஈர்) முற்று 11, (தெரிநிலைவினைமுற்று, குறிப்புவினைமுற்று) இடை 12, உரி 13, அடுக்கு 14 என்பனவாம். இச்சூத்திரத்தில் ஈரெச்சம் என்பதிலுள்ள ஈர் என்பதனை முற்றுக்கும் கூட்டல் வேண்டும். இன்றேல் பதினான்கு என்னும் தொகை பொருந்தாது. இதனானன்றே, நன்னூற்குரைகண்ட மயிலைநாதர் முதலாயினார் இங்ஙனமே கூட்டிப்பொருள் கொள்வாராயினர். எனவே, நன்னூலார் அல்வழியில் கொண்ட தொடர்கள் இவையென அறிந்தாம்.

இனி, தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினைமுற்றுக்கும் தனித்தனி தொடர் கொண்டாற்போலப் பெயரெச்ச வினையெச்சங்களையும் தெரிநிலை குறிப்பு என இவ்விரண்டாகப் பிரித்துத் தெரிநிலை வினைப்பெயரெச்சத்தொடர், குறிப்பு வினைப்பெயரெச்சத்தொடர் எனவும் தெரிநிலைவினைவினையெச்சத்தொடர் குறிப்புவினைவினையெச்சத்தொடர் எனவும் கொள்ளாததேன்? என்பதைப்பற்றி ஆராய்வாம்.

குறிப்புவினை முற்றுக்கள் பெரும்பாலும் தெரிநிலைவினைமுற்றுக்களை ஒத்துவரும் இயல்புடையன. ஆதலின் அவைகட்குத் தனித்தனி தொடர் கொண்டனர். குறிப்புப் பெயர் வினையெச்சங்கள் தெரிநிலைப்பெயரெச்ச வினையெச்சங்கள்போல அத்துணைப் பயின்று வருவன அல்ல. ஆதலின், அவற்றின்கண் பாகுபாடு கொண்டிலர் என்று கோடலே பொருத்தமுடைத்தாம். இதனைப் பின்வருவதனால் அறியலாகும். வடநூற்கடலையும் தென்னூற்கடலையும் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர்,

ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப

என்னும் நன்னூல் சூத்திரத்துக் குற்றியோ மகனோ ஆண்டுத்தோன்று நின்ற உரு என்று வினவினர்க்குத் துணிந்த பொருள் குற்றியாயின் "மகனன்று" எனக் கூறப்படும் சொற்றொடரை அல்வழியில் பதினான்கின் புறத்ததாய் அடங்கும் என்றனர். மேலும் அச்சொற்றொடரை மகனின் அன்று என ஐந்தாம் வேற்றுமை என்பாரும் உளர். அது போல் வரும் நீயல்லன் என்பது வேற்றுமைக்கேற்ற செய்கை (நின்னல்லன் எனப்) பெறாது வருதலின், ஐந்தாம் வேற்றுமை என்பதை மறுத்து அல்வழியில் பதினான்கின் புறத்ததென நாட்டினர். இராமாநுஜ கவிராயர்க்கும் இஃதே உடன்பாடு. அவர் உரையை நோக்குக. எனவே இங்ஙனம் அருகிவரும் தொடரைக் கூறாதொழிந்தவர் மிகச்சிறுபான்மையவாய் ஒன்றில் அமைத்துக் கோடற்குரியவாய் வரும் தொடர்களைக் கூறாதொழிதல் வியப்பன்று.

அற்றேலஃதாக, வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்

" தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத்தான "

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்து "இவ்வுருக் குற்றியாம் என்ற வழிஆம் என்பதனோடு குற்றியென்பதும் எழுவாயாய் நின்றே இயைந்தாற்போல, இவன் குற்றியல்லன் என்புழிஆம் என்பதன் எதிர்மறையாகிய அன்மைக் கிளவியோடும் குற்றியென்பது எழுவாயாய் நின்றே இயையும் என்பது" என்று கூறி அத்தொடர் அல்வழியில் எழுவாய்த் தொடரில் அடங்கும் என்றாராலெனின், அஃது ஆராயத்தக்கதே. அதனையும் சிறிது நோக்குவாம்.

குற்றியாம் என்றவழிக் குற்றியென்னும் எழுவாய், ஆம் என்னும் பயனிலையோடு இயைந்து நிற்பது அமைவுடைத்தே. குற்றியல்லன் என்புழி எழுவாயாயும் பயனிலையாயும் இயைந்து நில்லாமையின் எழுவாய்த்தொடர் என்றல் பொருத்தமன்று என்பது சிவஞான முனிவர் முதலியோர் கொள்கையாகும். ஆயின், அல்லன் என்னும் சொல் ஆம் என்பதன் மறையன்றோ எனின் கூறுதும். ஆம் என்னும்சொல்லின் மறைச் சொற்கள், அல்லன், அல்லள் அன்று, அல்ல என்பவையாம். என்னை, ஆம் என்பது செய்யும் என்னும் முற்றாதலின் அது பலர்பாலொழிந்த படர்க்கை நாற்பாற்கும் உரித்து. எனவே அதற்கு மறையாய் முன்காட்டிய நான்கு சொற்களும் பொருந்துதற் குரியவாம். அற்றாயின் ஆம் என்பதோடமைந்த குற்றி அல்லன் என்பதனோடும் அமையலாமெனின், ஆம் என்பது பொது வினையாய் அஃறிணை யொன்றன்பால் வினையும் கொண்டிருத்தலின் அமைந்தது; அல்லன் என்பது சிறப்பு வினையாதலின் குற்றி என்பதனோடு அமையாது என்பது சிவஞான முனிவர் முதலியோர் கருத்தாகும். அமைவுடைத்தாயின் திணை, பால் முதலிய வழுக்காக்கும் சூத்திரங்கள் வேண்டா என்பதும் அவர்கள் கருத்தாதல் கூடும்.

அண்மையில் வெளிவந்துள்ள, உயர்திரு. வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள் சேனாவரையம் விளக்கவுரையில் "பெரும்பாலான வாக்கியங்களில் எழுவாய், பயனிலையாக வரும் முழுச் சொல்லோடும் இயைந்து நிற்கும். அருமையாகச் சில இடங்களில் எழுவாய், பயனிலையின் பகுதியோடு மட்டும் முடியும். குற்றியலலன் என்பது இரண்டாவது முறைப்படி முடிந்தது" என்று எழுதியுள்ளார்கள். பெயரெச்ச வினையெச்சங்களாக வந்து முடிக்கும் சொற்களில் உள்ள பகுதிகளே பயனிலையாய் வருவதன்றி வினைமுற்றாய் வந்து முடிக்கும் சொற்கள் பகுதியால் முடிவது இல்லை. உதாரணமாக:— சாத்தன் வந்த காரியம் முடிந்தது; சாத்தன் உண்ண யான் முயன்றேன். இவ்வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் சாத்தன் என்பது வந்த என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடும், இரண்டாவது வாக்கியத்தில் சாத்தன் என்பது உண்ண என்னும் வினையெச்சத்தின் முதனிலையோடும் முடிந்தன. முற்றுவினையோடு முடிவதாயின் தனக்குரிய விகுதியீற்றானே முடியும் என்க.

அற்றேலஃதாக, தெரிநிலைவினைமுற்றோடு குறிப்பு வினைமுற்றுப் பெரும்பான்மையும் ஒத்தும் தெரிநிலை வினைப்பெயரெச்ச வினையெச்சங்களோடு குறிப்பு வினைப்பெயரெச்ச வினையெச்சங்கள் பெரும்பான்மை ஒவ்வாது அருகியும் வருதல் எவற்றாற் பெறுதும் எனிற் கூறுதும்.

ஆசிரியர் தொல்காப்பியர் உயர்திணைத் தெரிநிலைவினைமுற்றுக்களுக்கு "அவைதாம், அம்மாம்", "கடதறவென்னும் அந்நான்கு", "அன்னன்", "அர் ஆர்" என்னும் சூத்திரங்களைக் கூறி, உயர்திணைக்குறிப்பு வினைமுற்றுக்களுக்கு "அதுச்சொல்" "அன்மையின்" என்னும் சூத்திரங்களை அவற்றின்பின் கூறினர்.

இங்ஙனமே "அ ஆ வ", "ஒன்றன்படர்க்கை" என்னும் சூத்திரங்களை அஃறிணைத் தெரிநிலைவினைமுற்றுக்குக் கூறி "இன்றில" என்னும் சூத்திரத்தை அஃறிணை வினைக்குறிப்பு முற்றுக்குக் கூறினர். இவற்றான் தெரிநிலைவினைமுற்றுக்களும் குறிப்புவினைமுற்றுக்களும் பெரும்பான்மையும் ஒத்தவரவின என்பது புலனாம்.

முன்னிலைவினைமுற்றுக் கூறும்பொழுது, "அவற்றுள் முன்னிலைக்கிளவி" "இர் ஈர்" என்னும் சூத்திரங்களைத் தெரிநிலைக் குறிப்புகளுக்குப் பொதுப்படக் கூறினர். இதனானன்றே, ஆசிரியர் சேனாவரையர் இரண்டாம் சூத்திரத்து இறுதியில் குறிப்பு வினைமுற்றுக்களுக்கு உதாரணம் காட்டியதூஉமென்க. மேலும் அவர் "முன்னிலை வினைக்குறிப்புப்பலவாதலானும் எடுத்தோதா வழிப்படுவதோர் குறைபாடின்மையானும் இவற்றையுய்த்துணர வைத்தாரென்பது அல்லது எடுத்தோத்தில்வழி உய்த்துணர்வ தெனினும் அமையும்" என்று கூறியமையானும் இரண்டும் ஒத்த வரவின என்பது புலனாம்.

குறிப்புப்பெயர் வினையெச்சங்கள் இங்ஙனம் தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்களோடு இயைந்து வராமையினன்றே ஆசிரியர் தொல்காப்பியர் தெரிநிலை வினையெச்சங்களைச் "செய்து செய்யூ", "பின்முன்" என்னும் சூத்திரங்களால் கூறிக் குறிப்பு வினையெச்சங்களைப்பற்றி யாதும் கூருது போயினர். இதனுனன்றே சேனுவரையரும் இரண்டாம் சூத்திரத்து "என்ன கிளவியும்" என்றதனுல் இன்றி, அன்றி, அல்லது, அல்லால் என வரும் குறிப்பு வினையெச்சங்களும் கொள்க என்ருர். பெயரெச்சத்தைப்பற்றிக் கூறும்பொழுது "நிலனும் பொருளும்" என்னும் சூத்திரத்தால் தெரிநிலைப் பெயரெச்சங்களைப்பற்றிக் கூறிக் குறிப்புப் பெயரெச்சசங்களைப்பற்றி யாதும் கூருது போயினர். சேனுவரையரும் அங்ஙனமே போயினர்.

எனவே, தெரிநிலை வினைமுற்றுக்களோடு குறிப்பு வினைமுற்றுகள் ஒத்துப் பெரும்பான்மையும் வருதலும், தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்களோடு குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள் ஒவ்வாது அருகி வருதலும் பெற்ரும். இங்ஙனம் இலக்கியங்களில் அருகிவருதலைக் கண்டன்ரே பிற்காலத்து நன்னூற்குரைகண்ட ஆறுமுக நாவலர் முதலாயினுர் தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்கட்கு விகுதிகள் மிகுதியாகவும் குறிப்புப்பெயர் வினையெச்சங்கட்கு விகுதிகள் குறைவாகவும் குறிப்பிடுவராயினுர்.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய "எவ்வயின் வினையும் அவ்வியனிலையும்" என்னும் சூத்திரத்திற்குச் சேனுவரையர் கூறிய இரண்டாவதுரையும் நோக்குக. அது வருமாறு:-

"மேலைச் சூத்திரத்தாற் கூறப்பட்ட பொருள் மேலும் வரும் எல்லா வினையும் முற்றுச் சொல்லாய் நிற்கும் என்றவாறு. ஈண்டு வினையென்றது வினைச்சொல்லையாக்கும் முதனிலையை எல்லா வினையும் முற்றுச் சொல்லாமெனவே எச்சமாதலொருதலையன்றென்பதாம். ஆகவே வினைச்சொல்லாதற்குச் சிறந்தன முற்றுச்சொல்லே என்பதாம். எல்லா வினையும் முற்றுச்சொல்லாகலும், கச்சினன், கழலினன், நிலத்தன், புறத்தன் என்னுந் தொடக்கத்து வினைக் குறிப்பின் முதனிலை எச்சமாய் நில்லாமையும் வழக்கு நோக்கிக்கண்டு கொள்க. பிறவுமன்ன". இதனுலும் குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள் பயின்றுவருதலின்மை அறியப்படும். குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள் பெரும்பான்மையும் இலக்கியங்களில் முற்றுக்களாகவே ஆளப்படும். இதனுனன்றே "நன்னூலார் வினைமுற்றே வினையெச்சமாகலும் குரிப்புமுற்று ஈரெச்சமாகலும் உளவே" என்ருர். அதில் குறிப்புமுற்று ஈரெச்சமாகலும் என்பது மிகவும் நினைவு கூர்தற்பாலது.

அற்றேல் அஃதாக, "வேற்றுமையைம் முதலாரும்" என்னும் சூத்திரத்தில் (152ல்) கூறப்பட்ட பண்புத் தொகையை. பண்புத் தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை என இரண்டு தொகை நிலைத்தொடர்களாகக் கொண்டு அல்வழித்தொகையை ஆருக்கி,

ஈர் என்பதை முற்றுக்குக் கூட்டாமல் தொகாநிலைத் தொடரை எட்டாகக்கொண்டு அல்வழித் தொடர்கள் பதினான்கு என்று கொண்டால் என்னையெனிற் கூறுதும் :—

பண்புத்தொகையை அங்ஙனம் இருதொடராகக் கோடற்குச் சூத்திரத்தில் குறிப்பு ஒன்றும் இன்மையான் அது பொருந்தாது. எனவே தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என்றதனால் தொகை நிலைத்தொடர் ஐந்து என்பது உறுதியாகும். ஒன்றை உறுதிசெய்ய எண்ணுவோர் ஒருமுறைக்கு மும்முறை கூறுவது போன்று 362 ஆம் சூத்திரத்தில் வேற்றுமைத் தொகையோடு அல் வழித்தொகை ஐந்தையுங் கூட்டித் தொகை ஆறு எனவும், அன் மொழித் தொகையைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர் போன்று "பண்பு தொகவரூஉம் கிளவியானும்.........ஈற்றினின்றியலும் அன் மொழித் தொகையே" எனக்கூறுது, "ஐந்தொகை மொழிமேல் பிறதொகலன் மொழி" என அல்வழியிலுள்ள ஐந்து தொகை நிலைத் தொடர்களுள் அன்மொழித் தொகை யொழிந்த நான்கு தொகை யோடு வேற்றுமைத்தொகையையும் கூட்டி 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகலன்மொழி' எனக் கூறுதலானும் அல்வழித் தொகை நிலைத் தொடர்கள் ஐந்தே என்பது திண்ணம். அல்வழித்தொகை நிலைத்தொடர் ஆறு என்பதற்கு யாண்டும் எவ்வகைக் குறிப்பும் கிடைத்திலது. மாணக்கரிடம் பேரிரக்கம் கொண்ட பவணந்தியார் யாவும் தெள்ளிதில் விளங்குமாறே கூறுவர். அற்றாயின் அல்வழித் தொகாநிலைத் தொடர்கள் 9 என்பது எங்ஙனம் பெறுதுமெனின்யாம் முன்னர்க் கூறியாங்கு (உரையாசிரியர்கள் கொள்கைப்படி) இரண் டெச்சம், இரண்டுமுற்று எனக்கோடலால் 9 தொடர்களாம். நன்னு லார் கருத்தும் இதுவே. எப்படியெனில் கூறுதும்:-

நன்னூலார் யாண்டும் முறைவைப்பில் மாறுதவர். இது யாவர்க்கும் உடன்பாடு. அத்தகையோர் தொடர்கள் கூறவந்த சூத்திரத்தில் (ந. 152ல்) முற்றீரெச்சம் என்று கூறவேண்டியவர் ஈரெச்சம் முற்று என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறியது ஒரு பயன் கருதியேயாகும் யாதோ பயனெனின், இரண்டு என்னும் அடை யினுல் பயின்றுவரும் பெயரெச்ச வினையெச்சங்களைக் கொள்வதோடு அதனை முற்றுக்கும் கூட்டித்தெரிநிலைவினை முற்றையும் அதனே டொப்பப் பயின்றுவரும் குறிப்பு வினைமுற்றையும் கோடற்கென்க. யாண்டும் ஒரு பயன் கருதியே முறைவைப்பை மாற்றுவர் ஆசிரியர். அது இறுதிப்போலியை முற்கூறி அதுபோல் வேறு படவரும் சில இறுதிப்போலிகளைக் கொள்ளவைத்தமையால் அறியப்படும். அங் ஙனம் இரண்டு என்பதனை முற்றுக்கும் கொள்ளுமாறு கூறிற்றிலர் எனின் பதினான்கு தொடர்கள் கொள்ள யாதொரு குறிப்பும் இன்றிக் கூறினர் என்னும் குற்றம் உண்டாகும் அன்றியும், சில தொடர்களைக் குறிப்பிட்டுவிட்டுப் பதினான்கு தொடர்கள் எனக் கூறலுந் வழு வின்றாய் முடியும். அதனான் ஈர்முற்று என்று கோடலே முறை.

அற்றேல், பொதுவியலில் "முற்றீரெச்சமெனத் தொகாநிலைத் தொடர்கள் எட்டு எனக்கொள்ளுமாறு கூறிய தென்னையெனின் அல்வழித் தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது என்பது 152ல் பெறப் பட்டமையால் ஈண்டு முறைப்படியே கூறிவிட்டார். அன்றியும் ஈண்டுத் தொகாநிலைத்தொடர் இத்தனை எனக் கோடற்குரிய குறிப்பு வேண்டுவதில்லை. தொகைநிலைத் தொடர்களைக் கூறும்பொழுது "வேற்றுமை வினைபண்புவமை உம்மை அன்மொழி யெனவத்தொகை யாருகும்" என்பதில் அல்வழித் தொகை நிலைத்தொடர்கள் ஐந்து என்று கூறிவிட்டமையால் ஒழிந்தன தொகாநிலைத் தொடர்கள் என்பது பெறப்படும். எங்ஙனமாயினும் அல்வழியில் தொகைநிலைத் தொடர்கள் ஐந்து எனக்கணக்கிட்டு ஒரு முறைக்கு மும்முறை கூறி யுள்ளமையின், கணக்கிட்டுத் தொகை கூறப்படாத தொகாநிலைத் தொடர்களில்தான் பதினுன்கென்னும் தொகை முற்றுப்பெற வழி தேடல்வேண்டும். எனவே உரையாசிரியர்கள் கொள்கைப்படி இரண்டெச்சம் இரண்டு முற்று எனக்கொள்வதன்றி வேறு வழி யில்லை. ஆகவே குறிப்புப்பெயர் வினையெச்சங்களைக் கொள்ளாமை யால் யாம் கூறியவாறு அவை சிறுபான்மையவாதலின் அவற்றிற்கு வேறு தொடர்கள் கொண்டிலர் என்று கோடல் தகும்.

அற்றேலஃதாக, இரு பெயரொட்டுப் பண்புத் தொகையை வேறு தொடராகக் கொள்ளாமைக்குக் காரணம் யாதோ எனின் அதையும் காண்பாம். இரு பெயரொட்டுப் பண்புத்தொகை அத் துணைச்சிறப்புடையதாய்ப் பண்புத் தொகைபோலப் பெருவரவிற் றன்று. அதனுன்றே தொல்காப்பியர் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையைக் குறிப்பிடாது சென்ருர். உரையாசிரியர்கள், பண்புத் தொகையைக் கூறும் சூத்திரத்துக் காணப்படும் "என்ன கிளவியும்" என்றதனுல் இரு பெயரொட்டைக் கொண்டார்கள். சேனுவரையர் அச்சூத்திரத்து "என்ன கிளவியும்" என்றதனுல் சாரைப்பாம்பு, வேழக்கரும்பு, கேழற்பன்றி எனப்பண்புதொகாது பெயர் தொக் கனவும் அத்தொகையாதல் கொள்க எனக் கூறினுர். அத்தொகை யாதல் கொள்கவெனக் கூறியுள்ளதை நோக்கின் அதுவும் பண்புத் தொகையென்றே கருதுகின்ருர் என்பது புலனும். எச்ச முற்றுத் தொடர்கள், பெயரெச்சத் தொடர் வினையெச்சத் தொடர் எனவும் தெரிநிலை வினைமுற்றுத் தொடர் குறிப்பு வினைமுற்றுத் தொடர் எனவும் பாகுபாடுகொள்ள நின்ருற்போலப் பண்புத் தொகையென் பது கொள்ள நில்லாது,

... ...பண்புத்தொகை
இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனக்கொள்ளுமாறு

வருதலையும் நோக்கின் பண்புத்தொகை இரண்டு தொடராகக் கொள்ளும் அத்துணைச் சிறப்புடையதன்று என்பது புலனும்.

தொல்-எழுத்து 114 ஆம் சூத்திரவுரையில் இளம் பூரண அடி கள் இவ்வாறும் அல்லன எல்லாம் அல்வழி யெனப்படும். அவை யாவன எழுவாயும், விளியும், உவமத்தொகையும், உம்மைத்தொகை

யும், பண்புத்தொகையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையும், முற்றும், இருவகை யெச்சமும், இடையும், உரியும் என இவை" எனக் கூறுதலாலும் பெரும்பான்மையும் இளம்பூரண அடிகள் கருத்தைத் தழுவியே நன்னூல் ஆசிரியர் சூத்திரம் செய்திருத்தலினாலும் பண்புத்தொகையை இரண்டாகக் கோடல் சாலாதோ எனின் கூறுதும்:-

இளம்பூரண அடிகள் அல்வழித் தொடர்கள் பதினான்கெனக் கூறிற்றிலர். நன்னூலார் வினைத்தொகை, அன்மொழித்தொகை, அடுக்குத்தொடர் என மூன்றை அதிகஞ் சேர்த்துள்ளார். எனவே, அல்வழி இவையெனக் கூறுவதில் சிறிது மாற்றம் செய்துள்ளார் என்பது புலனாம். ஆகவே தாம் கருதியாங்கு முற்றுத் தொடரை இரண்டாக்கிப் பண்பை ஒன்றாகவே கொண்டார் எனக்கோடல் தவறாகாது. எனவே சிறப்பும் பயின்று வருதலும் இல்லாத இரு பெயரொட்டுப் பண்புத் தொகையைப் பண்புத் தொகையில் அடக்கிக் கூறியதுபோல் பயின்று வருதலில்லாத குறிப்புப்பெயர் வினையெச்சங்களைத் தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்களில் அடக்கிக் கூறினார் எனல் பொருந்துமன்றோ?

அங்ஙனம் சிறிது மாற்றஞ்செய்து ஈர்முற்றைக் கொண்டார் எனக்கொள்ளா தொழியின், சூத்திரம் 152ல் அல்வழி தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி, எழுவாய், விளி, பெயரெச்சம் வினை யெச்சம் (ஈரெச்சம்), முற்று, இடை உரி, அடுக்கு எனப் பதின்மூன்றைக் குறிப்பிட்டுத் தொகை கொடுக்கும்பொழுது பதினான்கெனக் கூறினார் என முடியும். முடியவே குறையும் (கூறாதொழிந்த) ஒரு தொடரைக் கற்போர் தம் அறிவினால் கண்டுகொள்ளவைத்தார் எனக்கொள்ளவரும். வரின்,

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செல்வனடியிற் செறித்தினிது விளக்கித்
திட்பநுட்பஞ் சிறந்தன சூத்திரம்

எனச் சூத்திரத்தின் இலக்கணம் கூறியவர் இங்ஙனம் கூறுவரோ என வினாவெழும். அதனாலும் அங்ஙனம் கொளல் வேண்டும் பதின்மூன்று தொடர் கூறிப் பதினான்கெனத் தொகை கூறுதல் சூத்திரம் அமைக்கும் முறைக்கு முற்றும் மாறாகும் என்பதையும் அறிக.

இளம்பூரண அடிகள் தொல்-எழுத்து-114 ஆம் சூத்திரத்தின் உரையில் பண்புத்தொகை, இரு பெயரொட்டுப் பண்புத்தொகை யெனக் குறிப்பிட்டுள்ளார். அதனாற்கோடும் எனின், இளம்பூரண அடிகள் உரைக்கு ஏற்கச் சூத்திரத்திற்கு உரை கூறுவதல்லது சூத்திர அமைப்புக்கேற்ப உரை கூறலின்றாய் முடியும். அன்றியும் தாம் கருதிய பொருள் விளங்கக்கூற இயலாது பிறர் உரைகொண்டே அறியுமாறு சூத்திரம் செய்தார் எனவும் முடியும் என்பதையும் நோக்குக.

பண்பை விளக்கு மொழி தொக்கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை

என்னுஞ் சூத்திரத்தில் நன்னூலார் எண்ணும்மை தந்து பண்புத் தொகைநிலைத் தொடர் இரண்டெனக் கொள்ளுமாறு கூறியதென்னை யெனிற் கூறுதும்:-

தொல்காப்பிய உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் பண்புத்தொகையை விளக்கும் சூத்திரத்திரத்திலுள்ள "என்ன கிளவியும்" என்பதனால் கொண்ட இரு பெயரொட்டுப் பண்புத்தொகையையும் கோடற்கே அங்ஙனங் கூறியதன்றி இரண்டு தொடராகக் கோடற்கன்றென்க. அங்ஙனம் இரு தொடராகக் கொள்ளும் கருத்தினராயின் அல்வழித் தொகைநிலைத் தொடர்களை ஆறெனக் குறிப்பிட்டுப் பண்புத் தொகையை விளக்கும் சூத்திரத்தை இரண்டாகக் கூறியிருப்பர். இவையும் இவையும் குணத்தொகை என்று கூறினரன்றி இவை பண்புத்தொகை, இவை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என வேறு வேறு தொடர்கள் கொள்ளற்குரிய குறிப்பில் கூறிற்றிலர் என்பதையும் நோக்குக இதனானும் இரண்டு தொடராகக்கொண்டிலர் என்பது நன்கு விளங்கும். ஆயின் வினைமுற்றை இரண்டு தொடராகக் கோடற்குக் காரணம் யாதோ எனின், யாம் முன்னர்கூறியபடி, தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினைமுற்றுக்கும் ஒப்ப இலக்கணங் கூறியதோடு இரண்டும் பெருவரவிற்றாய் வருதலைக் குறிப்பிட்டுள்ளமையேயாம். ஈர்முற்று என்பது இருவகையாகிய தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்களைக் குறிக்குமோவெனின் கூறுதும்:- ஈரெச்சம் என்றவழி "வந்த, போன" என்றாவது அல்லது "வந்து, போய்" என்றாவது கொள்ளாது எச்சத்தின் பாகுபாடாகிய பெயரெச்ச வினையெச்சங்களைக் கோடல்போல ஈர்முற்று என்றவழி, "வந்தான், போனான்" எனக்கொள்ளாது முற்றின் பாகுபாடாகிய தெரிநிலை வினைமுற்றுக் குறிப்புவினைமுற்று எனக்கோடலால் உளதாம் பிழை யாதோ என்க. அன்றியும் இளம்பூரண அடிகள் தொல்-எழுத்து 114 ஆம் சூத்திரத்தில் பெயரெச்ச வினையெச்சங்களைக் குறிப்பிடும் இருவகையெச்சம் என்பதையே, நன்னூலார் நன்னூலில் 152 ஆம் சூத்திரத்தில் ஈரெச்சம் என்று குறித்துள்ளார் என்பது அனைவருக்கும் உடன்பாடு, ஆகவே ஈரெச்சம் என்பது இருவகை யெச்சம் என்று பொருள்படுகின்றது என்பதில் ஐயமில்லை. எனவே ஈர் என்பதை முற்றுக்கும் கூட்டி இருவகை முற்று எனக் கொளல்தகும். ஆதலின், ஈர்முற்று எனக்கோடலே முறை.

இத்துணையும் கூறியவாற்றான் தொல்காப்பியர் வேற்றுமை அல்வழி எனத்தொடர்கள் கொண்டார். ஆனால் வேற்றுமைத் தொடர்கள் ஆறு எனக்கொண்டு, அல்வழித் தொடர் இத்தனை என்று கூறிற்றிலர் என்பதும், நன்னூலார் பதினான்கு தொடர்கள் அல்வழிக்குக் கொண்டார் என்பதும், பதினான்கு எனக்கோடற்கு 152 ஆம் சூத்திரத்திலுள்ள ஈர் (இரண்டு) என்பதனை முற்றிற்கும் கூட்ட வேண்டும் என்பதும் ஈரெச்சம் என்பதனால் தெரிநிலைப் பெயரெச்ச வினையெச்சங்களே கூறப்பட்டன என்பதும், குறிப்புப்பெயர் வினை

நற்றிணையில் தாவரங்கள்

வித்துவான். சொ. சிங்காரவேலனர்.
(தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்)

சடைசடையாகக் காய்த்துத் தொங்கப் பாலை வழியே இருந்த கொன்றை மரங்கள் 'நீடிய சடையோடு ஆடாமேனிக் குன்றுறை தவசியர்' போன்றிருந்த (142) செய்தியை அழகுபெறப் பாடியுள்ளனர் ஆசிரியர். இப்பகுதி கருத்துக்கினிய விருந்தாம் தகைமை உடையது. யானையினது அழகிய நெற்றிப் பட்டத்தின் தோற்றத்துக்குப் பொலிவுற மலர்ந்த கொன்றைக் கிளையினை உவமை கூறியுள்ள (296) பகுதி உன்னுந்தொறும் உவகை பயப்பதாகும்.

மதுரை மருதனிள நாகனர் நிறையப் பூத்துப் பொன்னிறமாகப் பொலிந்த கொன்றை மரத்தைக் காண்கின்றூர்; உவமை உரைக்க உன்னுகின்றூர். உச்சிமுதல் உள்ளங்கால்வரை பொன்னுலாகிய அணிகலையணிந்த மங்கையர் தோற்றம் அவர் மனத்தகத்தே முந்துகின்றது. ஆம்; இயற்கைதானே! மஞ்சள் மஞ்சளாகச் சரம் சரமாய்ப் பூத்துக் குலுங்கி நிற்கும் கொன்றை மரத்துக்கு இவ்வுவமை எத்துணை இயற்கையாய் உள்ளது!

'இழையணி மகளிரின் விழைதகப் பூத்த
நீடு சுரிஇணர சுடர்வீக் கொன்றை' (302)

என்பன மருதனிளநாகனரின் கவித்திறம் பொதிந்த வரிகள்.

நாகம்:

அம்மள்ளனர் என்ற செம்மொழிப் புலவர் மட்டுமே இம்மரத்தைப்பற்றி இயம்புகின்றூர். (82) தோழியிற் புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொள்ளுந் துறையாக இப்புலவர் பிரான் ஒற்றையங்க நாடக

(112-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யெச்சங்கள் சிறுபான்மைய அவற்றைத் தெரிநிலைவினைப் பெயரெச்ச வினையெச்சங்களில் அடக்கிக்கொளல் வேண்டும் என்பதும், அருகிவரும் தொடரைக் கூருது விட்டவர் ஒன்றில் அடக்கிக் கொள்ளுதற்குரிய தொடர்களைக் கூருதொழிந்தது பொருத்தமுடையது என்பதும், தெரிநிலை வினைமுற்ருேடு குறிப்பு வினைமுற்று ஒப்பப்பயின்று வருதலின் இரண்டு தொடராகக் கொள்ளப்பட்டதென்பதும், இவற்றிற்கு ஆதாரம் தொல்காப்பியச் சூத்திரங்கள் என்பதும், 152ல் கூறும் பண்புத்தொகையை, இரண்டு தொடர்களாக்கிக் கோடற்கு அச்சூத்திரத்தில் குறிப்பொன்றும் இன்றென்பதும், அல்வழித் தொகைநிலைத்தொடர்கள் ஐந்தே என மும்முறை கூறியுள்ளார் என்பதும், தொகைநிலைத் தொடர்கள் ஐந்தென வரைறையப்படவே பதினன்கு என்னும் தொகை முற்றுப்பெறத் தொகாநிலைத் தொடர்களில்தான் வழிதேடல் வேண்டும் என்பதும், தொல்-எழுத்து 114 ஆம் சூத்திரத்தில் இளம்பூரண அடிகள் கூறியதற்கேற்க(நன்னூலார் எப்படிச் சூத்திரம் அமைத்திருந்தாலும்) உரைகூறல் தகாது என்பதும், ஈர் என்பது முற்றுக்கும் கூட்டலாம் என்பதும் பெறப்பட்டன.

மொன்றை எழுதத்தொடங்குகின்ருர். பாங்கியின் பக்கபலத்தால் அவளைக் கூடிய அந்தத் தலைவன் தன் நெஞ்சின் அலைகளை நிகழ்த் தப்புகுகின்ருன்: அவளது பச்சைத் தோள்கள் மூங்கில் போலும் மூதெழில் உடையவை என்பதை 'வேய் வனப்புற்ற தோளை' என்று குறித்தான். அத்தோள் அல்லவா தானுற்ற காதல் நோயையும் அதனடியாக விளைந்த தன் மெய்த்தளர்ச்சியையும் நீக்கியது! என்று நினைக்கின்ற அவன் 'நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த' தன்மை யைக் குறிப்பிடுகின்ருன். அவளது அழகு நடையை அவனுல் மறக்க இயலவில்லை. 'நல்நடைக் கொடிச்சி' என்று மெள்ள விளிக்கின்ருன். 'முருகனைப் புணர்ந்து அவனெடு சென்ற வள்ளிநாச்சியார் போல எமது சிறுகுடிக்கண் நீ வருகுவையோ' என்று அடுத்து வினவு கின்ருன். தனது சிறுகுடியின் பெருமையை அவன் கூறும்படி அமைக்கின்ருர் புலவர். 'விண்ணளவும் போகிய நாகமரங்கள் செறிந்த கவர்த்தவழி; செல்லுதற்கரிய வழி; அங்கே சிறுகண்ணை யுடைய பன்றியின் ஏற்றை-சேற்றில் உழன்ற புழுதிபட்ட புறத்தை உடைய ஒருத்தலை வார் இழுக்கப்பட்ட வலைப்படுத்து நாய்கள் பற்றிச் செல்லாவண்ணம் விலக்கிக் கானவர்கள் கைப்பற்றும் சிறுகுடி எம் ஊர்' என்கின்ருன் அவன். புலவர்க்கு இப்படிக் கூறுவதன் வாயிலாக வேருென்று சொல்ல விருப்பம். வாரினகப்பட்ட பன்றியின் தசையை நாய்கள் பற்ருதவாறு கானவர் கைப்பற்றுதல் போலக் காமநோயகப்பட்ட தலைவியின் நலத்தைப்பற்றிக் கெடுக்கும் பசலை யைத் தலைவன் கெடுத்து அவளது அழகைப் பெயர்க்கும் ஆற்றல் உடையான் என்று சொல்லாமற் சொல்லித் தலைவனது தனிப் பேச்சை முடிக்கின்ருர் புலவர். நாகமரம் விண்ணளவுயர்ந்து தழைத்து நிழல் தரும் பெரிய மரவகையைச் சார்ந்த மரமாகும் என்பது இங்கே பெறப்பட்டது. காட்டுமரங்களில் இதுவும் ஒன்று.

ஓமை:

ஓமை மரம் உப்புப்பூத்த களர் நிலத்தேயே பெரும்பாலும் ஓங்கி வளரும் மரம் என்பதும், உயர்ந்து தழைந்து வளர்வதென்பதும், பருத்த அடிமரத்தை உடையதென்பதும், தழைந்திருப்பினும் வெயிற் கதிர்கள் நுழையும் அளவுக்குக் கிளைகளினூடே இடைவெளிகள் இல்லாமல் இல்லை என்பதும், யானைகள் இம்மரத்தின் தழைகளை விரும்பி உண்ணும் என்பதும் இம்மரத்தைப்பற்றி நற்றிணையிலி ருந்து நாமறியும் குறிப்புகளாகும். இவற்றை நல்கியுள்ள நற்ற மிழ்ப்பாவலர்கள் கயமனுரும், பாலைபாடிய பெருங்கடுங்கோவனுரும், பெயர் தெரியாப் புலவர் ஒருவரும் (அவரைப் பிறவா வெண்ணெயார் என்று அழைக்கலாமென்பது எனது கருத்தாகும்; அது பொழிலில் தனிக்கட்டுரையாக வெளிவரும்) ஆவர். அவர்களது அமுத மொழி

கள் படிக்கப் படிக்கப் பல பொருள் நலங்களால் பல்கி நிற்றலை உணரலாம்.*

பிடவு :

முல்லை நிலஞ்சார்ந்த மரங்களில் பிடவும் ஒன்று. கொன்றை மரங்களைப் போன்றே இவையும் கானகத்தே செறிந்து வளர்பவை. இம்மரம் கார்காலத்தே பூக்கும் இயல்பினது. இளந்திரையனார்,

"காரென்று அயர்ந்த உள்ளமொடு தேர்வில
பிடவும் கொன்றையும் கோடலும்
மடவவாகலின் மலர்ந்தன பலவே" (99)

என்று இவ்வியல்பைப் பாடியுள்ளார். இலையற்ற இம்மரங்கள் கார்காலத்தே மலர் அரும்பும் செய்தியையே விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார்,

"இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்
புதலிவர் தளவம் பூங்கொடி யவிழ" (242)

என்று விரித்துரைத்தார். கார்காலம் செய்த கவின்மிகு செயல்களில் பிடவு மரங்கள் தலையவிழ் மலர்களால் குலுங்கச் செய்த தலையான செயலைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ பின்வரும் வரிகளிற் பேசியுள்ளமை அறிந்தின்புறத்தக்கது:

"களவுடன் கமழப் பிடவுத் தளையவிழக்
கார்செயல் செய்த காமர்காலை" (256)

இருப்பை :

இருப்பை மரத்தைத் தற்காலத்தே இலுப்பை என்று வழங்குதல் பெரும்பான்மை. இதன் காய்கள் எண்ணெய்க்குப் பயன்படுகின்றன. நம்நாட்டுத் திருக்கோவில்கள் பலவற்றுள்ளும் இவ்விருப்பை யெண்ணெய் விளக்கெரிக்கப் பயன்பட்டு வருகிறது. இதன் பூ பார்க்க அழகியது; தின்றால் தித்திப்பது. மகரந்த கோசங்கள் அழகியன. அது பஞ்சுத்துய் போன்று விளங்கும். இருமீனின் மெல்லிய தலையை இத்துய்க்கு ஒப்பிடுகிறார் பெயர் தெரியாத நற்றிணைப்புலவர் ஒருவர். இப்பூவும் சர்க்கரைக்குப் பதிலாகத் தமிழகத்துச் சிற்றூர்களில் சிலரால் பயன்படுத்தப்பெறுகிறதென்பதனைக் கேட்கப் பெருவியப்பாக இருக்கிறதல்லவா? இதையொட்டி எழுந்ததுதான் 'ஆலையில்லா ஊர்க்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்' என்று வழங்கும் நாட்டுச் சொல்லும். இருப்பைப்பூப் போன்ற துய்த்தலையையுடைய இரு மீன்களைப் பிடிப்பதில் ஈடுபடும் இயல்பை நற்றிணைப் புலவர் பாடுகின்றார். இப்பூவின் இயல்பை உள்ளது

---

* "சுடுமண் தசும்பில் மத்தம் தின்ற
பிறவா வெண்ணெய் உருப்பிடத் தன்ன
உவரெழு களரி ஓமையங் காட்டு" (84)

"சேயின் வரூஉம் மதவலி யா உயர்ந்து
ஓமை நீடிய கானிடை யத்தம்" (198)

"பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருத்தாப் புகர்நிழல் இருந்தன மாக" (318)

உள்ளபடி நுணுகிக் கண்டுள்ள இப்புலவரின் நுண்ணறிவை என்னென்பது! இத்திறம் எதிர்காலப் புலவர் உலகத்துக்கேனும் பெருகவேண்டும் அல்லவா?

“அத்த இருப்பைப் பூவினன்ன
துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர்
வரிவலைப் பரதவர் கருவினைச் சிறுஅர்” (111)

அக்குடிப் பிறந்த மக்களைக் ‘கருவினை’ என்று கூறுகின்றார் கவிஞர். இங்குக் கருமை வன்மை; ‘கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய, இரும்புண்ணீரினும் மீட்டற்கரிது’ என்ற புறப்பாட்டிற்போல, வரிவலைப் பரதவர்க்கு வாய்த்த பிள்ளைகளாதலின் இளமையிலேயே இத்தொழில்-வலிய தொழில் அச்சிறார்க்கும் வாய்ப்புற்றதுபோலும்.

வேங்கை :

இதுவும் காடுகளில் செறிந்து வளரும் இயல்பினது. தினைப் புனங்களில் தினையறுப்பதற்குரிய காலத்தை இம்மரம் பூக்கும் காலங் கொண்டு தெளிவர். இதனை இக்காரணம் பற்றிக் ‘கணி’ என்று நயம்பட நவில்வர் இலக்கிய ஆசிரியர்கள்.

‘கடைக்கணியார் கணியார் நம்மை நாளைக் கருங்கணியே’

என்ற தஞ்சைவாணன் கோவைக் கவியை மறந்த புலவரும் உளரோ? இது எரிபோலப்பூக்கும் இயல்பினது; புலிபோலத் தோன்றுமாம் பூக்கள் மலர்ந்த தோற்றம். ‘கருங்கால் வேங்கைப் பூக்கள் உற்ற துறுகல் இரும்புலிக் குருளையினைப் போல் தோன்றும் காடு’ என்று இசைக்கும் குறுந்தொகை. வலிய அடிமரம் உடையது.

மிளகுக் கொடி வளர்ந்த மலைப்பக்கம், களவுப் புணர்ச்சியால் கடுவனால் முயங்கப்பட்டது ஓர் செம்முகமந்தி. புணர்ச்சி வேறு பாட்டால் விளைந்த குறியைப் புறத்தார் அறிதற்கு அஞ்சியதாம் மந்தி. கரியஅடியும் பொன்போலப் பூக்களும் உடைய வேங்கை மரத்தின் கிளைமீது ஏறியதாம். அங்கிருந்து கொண்டு சுனைநீரை நோக்கித் தலைகவிழ்ந்திருந்து தன்மென்தலையில் புணர்ச்சியாற் குலைந்த முச்சி மயிரைத் திருத்திக் கொண்டதாம் அம்மந்தி. அத்தகைய மலைநாடுடையோன் தலைவன் என்று இளநாகனார் பாடுகின்றார்.

“வாரற்க தில்ல தோழி கடுவன்
முறியார் பெருங்கிளை அறிதல் அஞ்சிக்
கறிவளர் அடுக்கத்திற் களவினிற் புணர்ந்த
செம்முகமந்தி செல்குறி கருங்கால்
பொன்னிணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்த்துதன்
புன்றலைப் பாறுமயிர் திருத்தும்
குன்றநாடன் இரவினானே” (151)

மிகஇனிய சுவைக்கத்தக்க கவிதைக் காட்சி இது. இங்கே வேங்கை யைப்பற்றிப் பார்க்கிறோம்.

"வேங்கை
வீயுக விரிந்த முன்றில
கல்கெழு பாக்கத்து அல்கினை செலினே" (232)

என்று முன்றிலழகை முறுவெங் கண்ணனர் மொழிந்துள்ளார்.

"எரியகைந் தன்ன வீததை இணர
வேங்கையம் படுசினைப் பொருந்தி" (379)

என்ற வரிகளிற் குடவாயிற் கீரத்தனர் இம்மரத்துப் பூக்களின் எழிலைப் புகன்றுள்ளார்.

வாழை:

மலைவாழை, பூவன் வாழை, மொந்தை வாழை, பச்சைநாடன் வாழை, நேந்திரன் வாழை, பேயன் வாழை. செவ்வாழை, சிறுமலை வாழை, என்று பலவகையாக நம் நாட்டில் நிலவி முக்கனிகளுள் ஒன்ருக இலங்குவது வாழை. இதன் இயல்புகளை இந்நூலில் ஆங்காங்குக் காணலாம்.

மலைச்சாரலில் இடும் வாழையை,
"வாழையஞ்சிலம்பின் வம்புபடக் குவைஇ" (176)

என்று பெயர் தெரியாப் புலவர் ஒருவர் பேசுகின்ருர். இம்மலைவாழையையே கபிலரும்

"வாழை ஓங்கிய வழையமை சிலம்பில்" (222)

என்று கூறியுள்ளமை காணலாம். யானையின் தந்தம் போன்ற வாழைத்தாறு என்றும், மகளிரின் கூந்தல் முடிச்சுப்போன்ற வாழைப்பூ என்றும், அதனெடு காற்றில் அசைந்தாடும் மலைநாடு என்றும் கபிலரே பின்னெருகால் இயம்புகின்ருர். அவ்வரிகள் இவை

"பொருதயானை வெண்கோடு கடுப்ப
வாழையீன்ற வையேந்து கொழுமுகை
மெல்லியல் மகளிர் ஓதியன்ன
பூவொடு துயல்வரும் மால்வரை நாடனை" (225)

"சோலை வாழை முனைஇ" (232)

என்ற தொடரால் யானைகள் மலைவாழையை விரும்பித் தின்னும் செய்தி முறுவெங்கண்ணனரால் மொழியப் பெற்றுள்ளது. வாழையின் கொழுவிய மடலகன்ற கட்டைத் குருத்தாகிய இலையிலே தாற்றினுள்ள இனிய நீர் கலந்து தங்கியிருக்கும் இயல்பு கபிலரால் பின்னும் இயம்பப்பெற்றது.

"ஆழல் வாழி தோழி வாழைக்
கொழுமடல் அகல்இலைத் தளிதலைக்கலாவும்" (309)

என்பது அவர் திருமொழி.

வயலுக்குப் பக்கத்திலே வாழைமரம் வளர்ந்து நிற்கிறது. அதன் மெல்லிய தாற்றுநுனியை வயலிலிருந்து எழுந்து அசைந்தாடும்

நெற்கதிர் அசைக்கின்றது. இவ்வாழை மலைவாழையன்று; வயல் வாழை. இக்காட்சியை ஆலங்குடி வங்கனூர் நமக்கு எழுதிக்காட்டுகின்றூர்.

> "வாழை மென்தோடு வார்புறுபு ஊக்கும்
> நெல்விளை கழனி நேர்கண் செறுவின்" (400)

இவ்வாறே குறிஞ்சி, நெமை, மூங்கில், யா முதலிய மரங்களைப்பற்றிய சிறு குறிப்புகளும், ஆம்பல் முதலிய கொடி வகைகளைப்பற்றிய செய்திகளும், செங்கருங்காலி பற்றிய செய்திகளும் நற்றிணையில் பொலிகின்றன. அவை இலக்கியத்தோடு சேர்ந்து இனிய காட்சி வழங்குங்கால் அக்காட்சியிலே நாம் நம்மை மறந்து ஈடுபடுகின்றேம்.

முடிவுரை :

உள்ளத்தின் திண்ணிய உணர்ச்சிகளை எழுத்தும், சொல்லும், பொருளுமாகிய வண்ணங் கலந்து கவிப்படம் தீட்டியுள்ள நற்றிணைப் புலவர்கள் அதனேடு இயற்கைத் தாவரங்களின் இயல்புகளையும் எவ்வாறு இணைத்து அழியாத அழகை விளைத்துள்ளார்கள் என்ற செய்தி இக்கட்டுரையில் ஆராயப்பெற்றது. இவற்றை ஆழ்ந்து பயிலுங்கால் மேலைநாட்டுக் கவிஞன் வேர்ட்ஸ்வொர்த் கவிதை பற்றி விளம்பிய விழுமிய கருத்து நம் சிந்தையிலே முந்திவருகின்றது, அவ்வரிகள் :

"Poetry is the spontaneous overflow of powerful feelings; it takes its origin from emotion recollected in tranquility"

நற்றிணைப்பாக்கள் இக்கருத்தின்படி கவிதை 'எவரெஸ்டு'கள் (Everest) என்று கூறலாம். தாவர இயல்புகளை உள்ளபடி புனைந்து உயிர்க்கவிதைகளாக ஒவ்வொன்றையும் எழுதியுள்ளார்கள் இவ்வொண்டமிழ்ப்புலவர்கள். ஆட்சிமொழி தமிழாகி உண்மையான தமிழ்ப்பற்று ஒவ்வொருவர் குருதியொடும் கலந்துவிட்டிருக்கும் இந்நாளில் நற்றிணை போன்ற சங்க இலக்கியங்களை ஆழப்பயில அனைவரும் முன்வருதல் வேண்டுமென்பதே எமது ஆசை.

முற்றும்.

அடுக்குமொழி.

சு. கு. அருணசலனர், அம்மாப்பேட்டை, சேலம்.

[துணர் ௩௩, மலர் ௩, எ௮ ஆம் பக்கம் உ௮ ஆம் வரிக்குப்பின் சேர்த்துப் படிக்க.]

ஒரு சொல் பல அடுக்கிவரும்வழி, பெயரடுக்கு, வேற்றுமை யடுக்கு, முற்றுச்சொல்லடுக்கு, பெயரெச்ச அடுக்கு, வினையெச்ச அடுக்கு, இடைச்சொல்லடுக்கெனப் பலவகைப்படும். அவற்றுள் வேற்றுமையடுக்காவது ஒருருபு அடுக்கி வருதலும் பலஉருபு அடுக்கி வருதலுமென இருவகைப்படும். அஃது "உருபு-தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக்கிளவி, ஒரு சொன்னடைய பொருள்சென் மருங்கே" (சொல். வேற். மயங். சு௮) என்பதாலறிக. ஒருருபு அடுக்கிவருதல் ஒரு பொருண்மேல் அடுக்கி வருதலும் பல பொருண்மேல் அடுக்கி வருதலுமென இருவகைப்படும். "தேம்பைந்தார் மாறனைத் தென்னர் பெருமானை, வேந்தனை வேந்தர்மண் கொண்டானை-யாஞ்சிறிதும் அங்கோல் வளைகவர்ந்தான் என்னலும் ஆகுமோ! செங்கோல் சிறுமையுற". இதனுள் ஐகார உருபுபல அடுக்கி ஒரு பொருட்கண் வந்து "வளைகவர்ந்தான் என்னலும் ஆகுமோ" என்பதனேடு முடிந்தவாறு கண்டுகொள்க. இங்ஙனமே மூன்ருவது முதலிய உருபுகளும் அடுக்கிவந்து ஒருவினையான் முடிவனவற்றுக்கு இலக்கியம் வந்தவழிக் கண்டுகொள்க.

உழவை, வாணிகத்தைச் செய்யும். சோற்றல் தண்ணீரால் வயிறு நிறைக்கும். பிற உருபுகளும் இங்ஙனம் அடுக்கி வருவன பல பெயர்க்கண் ஒருருபு வந்து ஒரு சொல்லான் முற்றுப்பெற்றன.

வினையெச்ச அடுக்கு 'பன்முறையானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாதடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே' சொல். உ௩௩

என்பதனுலறிக. காட்டு:- உண்டுதின்று ஓடிப்பாடி வந்தான். முற்றுச்சொல்லடுக்கு 'அவைதாம் ......(சொல். எச். ௩௩) என்னும் நூற்பாவாலறிக.

இடைச்சொல்லடுக்கு 'ஆக ஆகல் என்பதென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை' (சொல். இடை. ௩உ

என்பதாலறிக. ஒருவன்யான் இன்னேன் என்றுனும் நீயின்னை என்றுனும் அவன் இன்னன் என்றுனும் கூறிய வழிக்கேட்டான் ஆக ஆக, ஆகல் ஆகல் என்னும் இவை உடம்படாமைக் கண்ணும் விருப்பமில்வழியும் வரும். நீ கள்வன் என்றுல் ஆக ஆக எனின் அவை உடன்படாமையையாதல் விருப்பமின்மையையாதல் உணர்த்தியவாறு காண்க. ஒருவனென்றுரைப்பக் கேட்டான் 'என்பது என்பது' என்னும் அது நன்குணர்த்தற் கண்ணும் இழித்தற்கண்ணும் வரும்.

இக்காலத்து "ஆக ஆக ஆகல் ஆகல்", "என்பது என்பது" என்பனவற்றிற்குப் பதிலாக முறையே "ஆமாம் ஆமாம்", "அப்படிச் சொல், அப்படிச்சொல்" என்ற சொற்கள் வழங்குகின்றன.

அறநெறி காத்த அரசர்கள்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனார்.

பண்டைத் தமிழ் மன்னர்களிலே பலர் அறநெறி தவறாமல் அரசாண்டு வந்தனர். இதை விளக்கும் சான்றுகள் பல பழந் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. தமிழ் மன்னர்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளும் குடிமக்களின் மனம் மகிழ்ச்சியடையும்படி நலம் புரிந்தனர். மாறுபட்ட இருவர், தங்களுக்கு முறை செய்யும்படி வேண்டினால் நடுநிலையிலே நின்று நீதி வழங்கிவந்தனர்.

அக்காலத்திலே நீதி மன்றங்கள் இருந்தன. அவற்றில் அறிஞர்கள் அறம் கூறும் நீதிபதிகளாக அமர்ந்திருந்தனர். இந்த நீதிபதிகள் வாயிலாகவும் மக்களுக்கு நீதி வழங்கி வந்தனர். சில சமயங்களில் மன்னர்கள் தாமேயும், குடிமக்கள் கொண்டுவரும் வழக்குகளை நேரே ஆராய்வர்; வழக்கிட்டோர் மனக்குறையின்றி ஒப்புக்கொள்ளும்படி முடிவு கூறுவர்.

நீதி மன்றம்:

நீதி மன்றத்தை 'அறங்கூறு அவையம்' என்று கூறுகின்றது பத்துப்பாட்டு. நீதிபதிகளின் நேர்மை, அவர்கள் நீதி வழங்கும் முறை இவைகளைத் தெளிவாக அதிலே காணலாம்.

பத்துப்பாட்டிலே உள்ள மதுரைக்காஞ்சி மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது. பாண்டியன் நெடுஞ்செழியன் அப்பாட்டின் தலைவன். அதிலே நீதி மன்றத்தைப்பற்றிக் கூறப்படும் பகுதி நமக்கு வியப்பைத் தருகின்றது. அத்தகைய நீதிபதிகள், நீதிமுறை, நீதிமன்றம் இக்காலத்தில் இருக்கின்றனவா என்ற ஐயம் பிறக்கின்றது.

'பயம், துன்பம், ஆசை இவைகளை நீக்கியவர்கள்; ஒரு பக்கத்தாரிடம் சினமும், மற்றொரு பக்கத்தாரிடம் மகிழ்ச்சியும் காட்டாதவர்கள்; தம்மை நடு நிலையிலேயே நிறுத்திக்கொண்டவர்கள்; துலாக்கோலைப்போல் நடுநிலையிலே நிற்பவர்கள்; சிறந்த ஒழுக்கம் உள்ளவர்கள்; இத்தகையவர்கள் நீதிபதிகளாக அமர்ந்திருந்து நீதி வழங்கும் அறம்கூறு அவையம்.

அச்சமும், அவலமும், ஆர்வமும் நீக்கிச்
செற்றமும், உவகையும் செய்யாது காத்து,
ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்".

(மதுரைக்காஞ்சி வரி 489–492)

நீதிபதிகளின் நேர்மையை மாங்குடி மருதனார் எவ்வளவு அழகாகச் சித்திரிக்கிறார் என்பது எண்ணத்தக்கது. நீதிபதிகள்

உண்மையைக் கண்டறிந்து நீதி வழங்குவதில் அஞ்சக்கூடாது. பெருங்குற்றத்திற்குக் கடுந்தண்டனை விதிக்கும் நிலை ஏற்படும் போதும் சிறிதும் துன்புறக்கூடாது. அவர்கள் பேராசை பிடித்தவர்களாக இருக்கக்கூடாது; போதும் என்ற மனம் படைத்தவர்களாயிருத்தல் வேண்டும்; அளவு கடந்த ஆசையுள்ள நீதிபதிகள் தங்கள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அறத்தை அழிக்கவும் செய்வார்கள். இக்கருத்தை 'அச்சமும் அவலமும், ஆர்வமும் நீக்கி' என்ற ஒரே வரியில் தீட்டியிருக்கின்றார்.

வழக்கிடுவோரில் ஒருவர் உறவினராயிருக்கலாம்; அல்லது நண்பராயிருக்கலாம்; மற்றொருவர் தமக்கோ, தம் குடும்பத்திற்கோ பகைவராயிருக்கலாம்; நீதிபதியாக இருப்பவர்கள் இவற்றைச் சிறிதும் மனத்தில் எண்ணாமல் மறந்துவிடவேண்டும். இருவரையும் சமமாகக் கருதி நீதி வழங்கவேண்டும். 'செற்றமும் உவகையும் செய்யாது காத்து' என்ற வரி இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

ஒழுக்கம் உள்ளவர்களே நீதிபதிக்குத் தகுதியுள்ளவர்கள். ஒழுக்கம் அற்றவர்களால் நீதி நிலைகுலையும். ஒரு நாட்டில் உள்ள குடிமக்கள் அனைவரையும் அரசாங்கம் ஒத்த நிலையிலேயே கருத வேண்டும்; ஒத்த நீதியே வழங்கவேண்டும், சாதிக்கொரு சட்டம், மதத்துக்கொரு சட்டம்; சாதிக்கு ஏற்றவாறு நீதி; மதத்திற்கேற்றவாறு நீதி; என்று வழங்கும் முறை அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. மக்கள் அனைவரையும் மக்களாகவே மதித்து நீதி வழங்குவதே சிறந்ததாகும். 'மக்களாட்சி' என்று சொல்லுகின்ற இக்காலத்திலும் இம்முறை ஏற்படவில்லை.

நீதி வழங்கும் முறை :

பண்டைக்காலத்தில் நீதிவழங்கிய முறைக்கும் இக்காலத்தில் நீதிவழங்கும் முறைக்கும் ஒரு பெரிய வேற்றுமை உண்டு. இந்த வேற்றுமை மிகவும் குறிப்பிடத்தக்கதொரு வேற்றுமை.

பண்டைக்காலத்தில், உண்மையான குற்றவாளியைக் கண்டறிந்து தண்டனை வழங்கவேண்டும்; குற்றமற்றவர்களுக்குத் துன்பம் உண்டானால் பாதுகாக்கவேண்டும். சாட்சியளிப்போரைக்கொண்டுமட்டும் ஒரு வழக்கிலே தீர்ப்பளிக்கமாட்டார்கள். நீதிபதிகளும் தங்கள் நுண்ணறிவைக் கொண்டு குற்றம் யார் பக்கத்தில் என்பதைக் கண்டறிவார்கள். மாறுவேடம் பூண்டு சென்றுகூட குற்றவாளிகள் யார்? குற்றம் அற்றவர்கள் யார்? என்பதைத் தெரிந்துகொண்டு நீதி வழங்குவார்கள். பொய்க்கரி புகல்வோன் ஒரு மரத்தடியில் நின்றால்

அம்மரம் பட்டுப்போகும்; அவன் குடும்பம் பாழாகும்; அவன் செல்வம் பாழாகும்; அவன் மீளா நரகுக்கு ஆளாவான் என்றெல்லாம் பொய்க்கரி கூறுவோரைப்பற்றிப் பண்டை நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள் பொய்க்கரி புகல அஞ்சினர். ஆயினும் தந்நலம் காரணமாகப் பொய்க்கரி புகல்வோர் சிலரும் இருந்திருக்கத்தான் வேண்டும். பொய்ச்சாட்சி சொல்வோர் அடையும் நிலையைப்பற்றிக் கூறியிருப்பதைக் கொண்டே அத்தகையோரும் இருந்தனர் என்று எண்ண இடந்தருகின்றது. ஆகையால் நீதிபதிகள் முழுவதும் சாட்சிகளையே நம்பித் தீர்ப்புக்கூறுமல் உண்மையைக் கண்டறிய முயன்றனர். மதுரைக்காஞ்சியில் கூறிய தகுதியுள்ள நீதிபதிகளால்தான் துலாக்கோல்போல் நின்று நீதி வழங்க முடியும்.

இக்காலத்தில் உள்ள நீதி முறை முன் காலத்து நீதி முறைகளுக்கு முரணனது உண்மையின்மேல் நீதி வழங்கமுடியாது; சட்டத்தின்மேல்தான் நீதி வழங்க முடியும்.

இக்காலச் சட்டப்படி, உண்மையான கொலையாளி தப்பித்துக்கொள்ள முடியும்; ஒரு பாவமும் அறியாத அப்பாவி கொலையாளியாகித் தூக்குத் தண்டனை பெறமுடியும். கொலை செய்ததை நேரே கண்டதாகச் சாட்சிகள்—சாட்சியங்கள் இல்லாவிட்டால் கொலையாளி விடுதலை பெற்றுவிடுவான். குற்றமற்ற ஒருவனைப்பற்றி, இவன்தான் கொலைசெய்தான்; அதை நாங்கள் கண்ணுல் கண்டோம் என்று கூறும் சாட்சிகள் இருந்தால் அதற்கான சாட்சியங்கள் இருந்தால் — அவன் கொலையாளியாகிவிடுவான். நீதிபதிக்கு, யார் குற்றவாளி—யார் குற்றமற்றவர்—என்று தெரிந்தாலும்கூட அவர் தன் மனச்சாட்சியின்படி நீதி வழங்கமுடியாது. சட்டத்தின் நெறியைப்பற்றியே நீதி வழங்க வேண்டும். சட்டம் சாட்சிகளையும், சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

சுருக்கமாகக் கூறினுல் பண்டைக்காலத்தில் உண்மையின்படி நீதி வழங்கப்பட்டது; இக்காலத்தில் சட்டத்தின்படி நீதி வழங்கப்படுகின்றது. பண்டைக்காலத்தில் உண்மையை மறைத்துவிட முடியாது. இக்காலத்தில் உண்மையை மறைத்துவிட முடியும். இதனுல் இக்காலத்தில் சட்டங்களும், நீதிகளும், வலுத்தவர்களுக்கே பெரும்பாலும் துணை செய்யக்கூடியனவாயிருக்கின்றன; இளைத்தவர்களுக்கு நேர்மையும், நீதியும் கிடைப்பது அவ்வளவு எளிதாக இல்லை. இதுதான் பழங்கால நீதி முறைக்கும், இன்றுள்ள நீதி முறைக்கும் உள்ள தலைகீழ் வேற்றுமை.

கரிகால் சோழன்:

நேர்மையான நீதி வழங்கிய மன்னர்களிலே கரிகாற்

சோழன் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றான். அவன் இளம் பருவத்திலேயே நுண்ணறிவு படைத்தவனாயிருந்தான். வழக்குகளின் உண்மையை உணர்ந்து முடிவு கூறுவதில் ஒப்பற்றவனாயிருந்தான்.

பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநர் ஆற்றுப்படை என்பது கரிகாலன்மீது பாடப்பட்டது. அதைப்பாடிய ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார். இவர் அவனைப்பற்றிய வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

"கரிகாற் சோழன் அரசாட்சி செய்த காலத்தில் இரண்டு முதியவர்களுக்குள் ஏதோ வழக்கு ஏற்பட்டது அவ்வழக்கை அவர்களால் பேசித் தீர்த்துக்கொள்ளமுடியவில்லை. கரிகாலனிடம் வழக்கைக்கூறி முடிவு பெறலாம் என்று நினைத்து அவனிடம் அணுகினர். தோற்றத்திலே அவன் இளைஞனாயிருப்பதைக் கண்டனர். ஆதலால் 'இந்த இளைஞனால் நமது வழக்கை ஆராய்ந்து, உண்மையைக் கண்டறிந்து, உரைக்கமுடியுமோ' என்று ஐயுற்றனர். அவர்களின் ஐயத்தைக் குறிப்பால் அறிந்தான் கரிகாலன். அவர்களுடைய வழக்கை, அறநூல் அறிந்த முதிர்ந்த நீதிபதி ஒருவரிடம் மாற்றுவதாக உரைத்தான். அவர்களும் மகிழ்ச்சியோடு இசைந்தனர். பின்னர், அவனே, நரைமுடியும் தாடியும் தரித்தவனாய் நீதி மன்றத்திலே வந்து அமர்ந்தான். முதியோர்கள் உரைத்த வழக்கைக் கேட்டான். இருவரும் ஒப்புக்கொள்ளும்படி நீதி வழங்கினான்'. இதனை

"முதியோர், அவைபுகு பொழுதில், தம்
பகை முரண் செலவும்" (188)

என்ற பொருநர் ஆற்றுப்படை அடியினால் அறியலாம். இந்த வரலாற்றைப் பழமொழிப் பாட்டு ஒன்று தெளிவாகக் கூறுகின்றது.

"நாம் சொல்வதைக் கேட்டறிந்து நமது வழக்கிலே முடிவு கூறுவதற்கு அறியாதவன்; அனுபவம் இல்லாத இளமைப் பருவம் உள்ளவன்; என்று இவ்வாறு ஐயுற்ற முதியவர்கள் மகிழும்படி நரைத்தாடி மீசைகளை வைத்துக்கொண்டு நீதிபதியாக வந்து உட்கார்ந்தான். அம்முதியவர்களின் சொற்களைக் கேட்டான். உண்மையை உணர்ந்து அவர்கள் வழக்கிலே முடிவு கூறினான். அம்முடிவைக் கேட்டு அவர்கள் உவப்படைந்தனர். ஆதலால் குலவித்தை கற்றுக்கொள்ளாமலே நன்றாக வந்துவிடும்.

"உரைமுடிவு காணான் இளமையோன், என்ற
நரைமுது மக்கள் உவப்ப, — நரைமுடித்துச்,
சொல்லால் முறை செய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்." (பழ. 21)

இப்பழமொழிப் பாட்டும், பத்துப்பாட்டில் கண்ட வரலாற்று நிகழ்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. பண்டைத் தமிழரசர்களின் நீதிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தமிழரசர்கள், தாமே நீதிபதியாக இருந்து வழக்குகளைக் கேட்டு அறநெறிப்படி முடிவு கூறினர் என்பதற்கும் இது ஒரு உதாரணம்.

நீதிக்குக் காலக்கெடுவில்லை.

மற்றொரு சோழமன்னன் வரலாறு பழமொழி, சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய நூல்களில் காணப்படுகின்றது. பெரியபுராணம் இவனை மனுநீதிகண்ட சோழன் என்று பெயர் சுட்டுகின்றது. பழமொழியிலோ சிலப்பதிகாரத்திலோ பெயர் குறிக்கப்படவில்லை.

"சோழன் மகன் ஒருவன், பசுங்கன்று ஒன்றின்மேல் தன் தேரை ஊர்ந்து சென்று விட்டான். இந்நிகழ்ச்சியை அரசனுக்குத் தெரியாமல் அறிஞர்கள் – அமைச்சர்கள் மறைத்து விட்டனர். நீண்ட நாட்களுக்குப் பின்னர் இந்நிகழ்ச்சியை அறிந்தான் அரசன். உடனே, பல்லாண்டுகளுக்கு முன்னே பசுங்கன்றைக் கொன்ற, தன் மகன்மேல் தானும் தன்னுடைய தேரை ஊர்ந்து சென்றான். ஆதலால், நீதிமுறை செய்வதற்கு நீண்டகாலம் குறுகியகாலம் என்ற காலக்கெடு இல்லை.

"சாலமறைத்து ஓம்பிச் சான்றவர் கைகாப்பக்,
காலை கழிந்ததன் பின்றையும்,—மேலைக்
கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பு, இளமை, இல். (பழ. 93)

பழமொழியிலே குறிக்கப்பட்ட இவ்வரலாறு சிலப்பதிகாரத்திலே வேறு விதமாகக் கூறப்படுகின்றது.

'சோழன் மகன் பசுவின் கன்றைப் பாராமல் தேர்ச்சக்கரத்தால் அரைத்துக் கொன்றுவிட்டான். உடனே, அரசனுடைய அரண்மனை வாசலிலே கட்டியிருந்த ஆராய்ச்சிமணி அடித்தது. அரசன் வெளியே வந்து பார்த்தான். கன்றையிழந்த பசு கண்ணீர் சிந்திக்கொண்டு நின்றது. அது அவன் உள்ளத்தைச் சுட்டது. நடந்த நிகழ்ச்சியை அறிந்தான். உடனே தன் மகனைத் தேராழியால் கொன்று, அப்பசுவைப்போல் தானும் கண்ணீர் சிந்தினான்' என்பது சிலப்பதிகாரம். இதனை

'வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத், தான்தன்
அரும்பெறல் புதல்வனை, ஆழியின் மடித்தோன்,
பெரும்பெயர்ப் புகார் என் பதியே'.
(சிலப். வழக்குரை 53–56)

இவ்வரலாறு பழமொழியின் வரலாற்றுக்கு மாறுபட்டது. இச்

சிலப்பதிகார வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுதான் பெரிய புராணக்கதை பிறந்திருக்கின்றது.

பழமொழியிலும் சிலப்பதிகாரத்திலும் பசுங்கன்றுக்காக மகனைக்கொன்ற சோழன் பெயர் சொல்லப்படவில்லை. பெரிய புராணம், சோழனுக்கு மனுநீதிகண்டசோழன் என்றும், அவன் மகனுக்கு வீதிவிடங்கன் என்றும் பெயர் வைத்துவிடுகின்றது. சிலப்பதிகாரம் இந்த நிகழ்ச்சி சோழர் தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்ததாகக் கூறுகின்றது. பெரிய புராணம் திருவாரூரில் நடந்ததாகச் சொல்லுகின்றது.

பழமொழியில் கூறும் நிகழ்ச்சியே இயற்கையாகவும் உண்மை போலவும் காணப்படுகின்றது. இந்நிகழ்ச்சி பத்துப் பாட்டு எட்டுத்தொகை போன்ற சங்க நூல்களில் காணப்பட வில்லை. எப்படியாயினும் இந்நிகழ்ச்சியும், தமிழ் மன்னர்களின் நீதிமுறைக்குச் சிறந்ததோர் உதாரணமாகும்.

பொற்கைப் பாண்டியன் :

பாண்டிய மன்னன் ஒருவன் ; தன்னுயிர்போல் மன்னுயிர் களைப் புரப்பவன் ; குடிகள் ஒருவரும் குறையுறுமல் வாழ வேண்டும் என்பதே அவனுடைய குறிக்கோள். அவனுடைய தலைநகரத்தில் கீரந்தை என்ற அந்தணன் ஒருவன் வாழ்ந்தான். அவன் ஒருநாள் கங்கையாடப் புறப்பட்டான். அவன் மனைவி 'என்னைத் தனியாக விட்டுச்சென்றால் யார் பாதுகாப்பர்' என்றாள்.

'அரசன் காப்பான் அஞ்சாதே' என்று உரைத்தான் அவன்; இதை நகரசோதனை செய்ய வந்த அரசன் காதிலே கேட்டான். அன்றுமுதல் நாள்தோறும் அவ்வீட்டைப் பாதுகாத்து வந்தான் பாண்டியன்.

ஒருநாள் இரவில் அவ்வீட்டினுள் ஆண் குரல் ஒன்று கேட் டது. உடனே அரசன் கதவைக் கையால் தட்டினான். கங்கை யாடச் சென்றிருந்த அந்தணன் அன்றுதான் திரும்பி வந்திருந் தான். அவன் கதவு தட்டப்பட்ட ஓசையைக்கேட்டு 'யார் அது' என்று உரத்துக்கேட்டான். உடனே, கங்கையாடச் சென்ற கீரந்தை திரும்பி வந்துவிட்டான்; அவன்தான், தன் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றான்' என்பதை உணர்ந்தான் மன் னன். அந்த வீட்டின் கதவைத் தட்டியதுபோலவே அவ்வரி சையில் இருந்த ஏனைய வேதியர்கள் வீட்டுக் கதவுகளையும் தட்டி விட்டு அரண்மனைக்குப் போய்விட்டான்.

மறுநாள் கூடிய அரசசபையிலே இச்செய்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் இத்தகைய தீங்கு செய்தவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று மறையவர்களைக் கேட் டான். அவர்கள், 'அவன் கையை வெட்டிவிடவேண்டும்' என்

றனர். அப்பொழுதே அரசன் தன் உடைவாளை உருவினன் தன் கையைத் தானே குறைத்தான். அதைக்கண்டு அனைவரும் வியந்தனர். பிறகு அந்தணர்கள் வேள்வி ஒன்று இயற்றினர். அதனால் குறைக்கப்பட்ட அவன் கை பொன் கையாக வளர்ந்தது என்பது பொதுவாக வழங்கும் கதை.

பண்டைத் தமிழ் மன்னர்கள் தமது குடிமக்கள் எந்தக் குறையும் எய்தாமல் காத்து வந்தனர் என்பதற்கே இக்கதை பிறந்தது. இதைப்பற்றியும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களில் காணப்படவில்லை. பழமொழியிலும், சிலப்பதிகாரத்திலும், ஒரு தனிப்பாடலிலுமே இக்கதை காணப் படுகின்றது.

"நீதிமுறை செய்யும் எனக்கு இச்செயல் தகுந்தது அன்று" என்பதை நினைத்தான், வேறொரு சாட்சியில்லாவிட்டாலும் தனக்குத் தானே சாட்சியாக நின்றான், தன் தவற்றைத் தானே உணர்ந்து தன் கையைத் தானே வெட்டிக்கொண்டான். இவ்வாறு செய்தவன் ஒரு பாண்டியன். ஆதலால் நல்லோர்கள், பிறர் காணமாட்டார்கள் என்று நினைத்துத் தீமை செய்யமாட்டார்கள்.

எனக்குத் தகவுஅன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரிஆவான் தானாய்த், தவற்றை
நினைத்துத் தன் கைகுறைத்தான் தென்னவனும்; காணார்
எனச் செய்யார், மாணா வினை'. (பழ 102)

இதுவே பொற்கைப் பாண்டியன் கதைக்கு ஆதாரவான பழமொழிப் பாட்டு.

"வறுமையிலே வாழ்ந்த கீரந்தை என்பவனுடைய மனைவியின் வீட்டின் கதவை ஒருநாள் பாண்டியன் தட்டினான், உள்ளேயிருந்த அந்தணன் கதவைத் தட்டுவது யார் என்று தன் மனைவியிடம் ஐயத்துடன் கேட்டான். அவள் அரசனுடைய பாதுகாவலைத்தவிர, வேறு குற்றமற்ற பாதுகாவல் இல்லை என்று கூறினீர். பாதுகாப்பற்ற மனையிலே என்னைத் தனித்திருக்க விட்டுச் சென்றீர். அதன்படியே இன்று அந்த அரசாகிய வேலியே பாது காத்தது; பாதுகாக்காதோ? என்று கூறினாள்.

இதை அரசன் காதில் கேட்டான். காய்ச்சிய ஆணிபோல் இச்சொல் அவன் நெஞ்சிலே புகுந்தது. புகையோடு கூடிய துன்பத் தீ மூண்டு அவன் உள்ளத்தைச் சுட்டது. வேதியன் தன் மனைவியிடம் ஐயம் கொள்ளும்படி செய்துவிட்டோமோ என்று அஞ்சி நடுங்கினான். உடனே வச்சிராயுதத்தைக் கையிலேயுடைய தேவேந்திரனது கிரீடத்தில் உள்ள ஒளி பொருந்திய வளையத்தை உடைத்த வலிமை பொருந்திய தன் கையைத்

தானே வெட்டிக்கொண்டான். இத்தகைய செங்கோலையும், குறையாத வெற்றியையும் உடைய இறைவன்" என்பது சிலப்பதிகாரம். இதனை,

'உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்';
'அரைச வேலி அல்லது, யாவதும்
புரைதீர் வேலி இல்,என மொழிந்து
மன்றத்து இருத்திச் சென்றீர்; அவ்வழி,
இன்று அவ்வேலி காவாதோ?' எனச்
செவிச்சூட்டு ஆணியில் புகைசுழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று,
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து இறை'
(சிலப், கட்டுரை 42–53)

இச்சிலப்பதிகாரக் கதைக்கும், மேலே எடுத்துக்காட்டிய வழக்கத்தில் உள்ள கதைக்கும் சிறிது வேறுபாடு காணப்படுகின்றது. பழமொழிப் பாட்டில் உள்ள நிகழ்ச்சியும், சிலப்பதிகாரம் கூறும் நிகழ்ச்சியும் ஒன்றாகவே காணப்படுகின்றன.

கொற்கையான் மாறன் குலசேகர வழுதி
பொற்கையான் ஆனகதை போதாதோ?"

என்று ஒரு தனிப்பாடல் காணப்படுகின்றது.

"கையரிந்தான் மாறன் கதவுஇடித்த குற்றத்தால்"

என்பது இரங்கேச வெண்பா. இவ்வாறு இப்பொற்கைப் பாண்டியன் வரலாறு இன்னும் பல பாடல்களில் பாராட்டப்படுகின்றது.

மேலே காட்டிய, கரிகாலன் வரலாறு, மனுநீதி கண்ட சோழன் வரலாறு, பொற்கைப் பாண்டியன் வரலாறு, இவைகள் எல்லாம் உண்மையா? வரலாற்று நிகழ்ச்சியா? என்று ஆராய வேண்டியதில்லை. வரலாறோ, புனைந்துரையோ, எப்படியோ ஆகட்டும். பழந்தமிழ் வேந்தர்கள் குடிமக்களின் குறைகளைப் போக்குவதிலே—அவர்களுக்கு நடுநிலையிலே நின்று நீதி வழங்குவதிலே—கருத்தூன்றியிருந்தனர். இவ்வுண்மையை விளக்குவதற்கு இக்கதைகள் உதவுகின்றன.

பழந்தமிழ் வேந்தர்கள் நீதி மன்றங்களின் வாயிலாகவும் மக்கள் வழக்குகளைத் தீர்த்தனர். தாமேயும் நேரே வழக்குகளைக்கேட்டறிந்து முடிவு கூறினர். தங்கள் குடிமக்களின் குறைகளைக் கேட்டறிந்து—கண்டுணர்ந்து—அவைகளை நீக்கினர். இவ்வுண்மைகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன.

71-ம் பக்கத் தொடர்ச்சி.

தாய்மை.

"ஒப்புரவு"

4. குசுகுசுத்துக் கும்பலிட்டுக் கட்சிசேர்த்துக்
குரங்கென்னு மொருபெண்ணை மற்றோர்குற்றி
நசுநசுப்பிங் கேனென்பா ளொருத்தி, யங்கே
நாளைக்கு வாவென்பாள் பிறிதொருத்தி;
பிசுபிசுத்த தலைமுற்றும் பேனேயென்பாள்,
பேயென்பாள், நாயென்பான், பெண்மைநட்புப்
பொசுபொசுத்துப் போயினபின் கூச்சல்கேட்டுப்
போனக்கால் பொலபொலெனப் பொழியுஞ்சொற்கள்.

5. "இருகாதும் போதாது கேட்டுவைக்க,
என்னம்மா தனித்தனியே எடுத்துச்சொன்மின்;
பெருகார்வங் கொண்டிங்கே யாடினீர்கள்,
பேய்,நாயென் றிப்போது பேசுகின்றீர்;
பெருகியிரு விழிநீரும் வற்றிப்போகப்
பெத்தாயி யழுகின்றாள், என்னே"வென்ன,
அருகிருந்த வில்லாயி, அடுக்கிவிட்டாள்,
அவள்முன்னே மேடைப்பேச் சயர்ந்துபோகும்.

6. வகுப்புக்குள் வாய்திறவா வில்லிசொல்வாள்,
"மல்லிகைப்பூ தலைநிறைய வைத்திருந்தேன்,
பகுப்பாகச் சடைபோட்டே யெங்களம்மா
பத்திரமாய்ப் போய்வாவென் றுரைத்தாளண்ணா,
தொகுப்பாகப் பெத்தாயி, பொன்னி,வள்ளி
சூழ்ந்தெனது தலைப்பூவைப் பிய்த்துப்போட்டார்:
நகைப்பாகப் பேசிவிட்டு நழுவினார்கள்,
நானோடிப் பெத்தாயி மாலைதொட்டேன்".

7. "தொட்டாளா, இழுத்தறுத்துப் போட்டாளண்ணா,
சூடியபூ நான்தொடவே யில்லை,பின்னும்
விட்டாளா, நறுக்கென்று கிள்ளிவிட்டாள்,
வீட்டுக்கு வாவென்று மிரட்டுகின்றாள்;
பட்டாளம் போலென்னைச் சூழ்ந்துகொண்டார்,
பார்வதியைக் கேளுங்க" ளென்னும்போதே
சிட்டாகப் பறந்திட்டாள் செல்லம்; அங்குச்
செம்புகம்வந் தின்னபடி செப்புவாளே.

8. "கேளுங்க ளண்ணா,பூப் பிய்த்துப்போட்ட
கிறுக்கியதோ வோடுகிறாள்", பிடித்துவா,போ"
;"தேளைப்போல் மறைந்திட்ட செல்லம், என்ன
செய்திட்டாய்?" "அண்ணண்ணா, வில்லியென்னை
ஆளைப்பார், மூஞ்சியைப்பார் என்றுசொன்னாள்;
அழகுக்குக் குறைவென்ன வென்றேன்; போடி
வேளைப்பூ வுன்றலையி லென்றாள்! இந்த
விதஞ்சொன்னால் யார்சும்மா விருப்பாரண்ணா?"

(தொடரும்.)